நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ் 28 16-31 ஓகஸ்ட் 1993 விலை 7/=



குத்துக் கரணமென்றும் கொடிய துரோகமென்றும்
கத்திக் கரைவானேன்? காமினியார் - பித்தேறி
பிரிந்து பறந்தாலும் பேரானை என்றேனும்
பருந்தாகிப் போமோ போ.

ஈழமோகம்

புதிய பாராளுமன்றத் தெரிவுக்குழு

# இனவாதமேலாதிக்கத்திற்கான இன்னொரு முயற்சி

ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வருவதற்காகவும் ஏனைய சில திருத்தங்களை அரசியல் யாப்பில் செய்வதற்காகவும் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான ஆலோசனைகளை அனைவரும் வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத் தெரிவுக் குழு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது முதல் அனைத்து நடவடிக்கைகளையும் சிறுபான்மையினருடைய ஆதரவின்றிச் செய்யக் கூடியதாகத் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஏற்கனவே இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு ஐ.தே.கட்சி தீர்மானித்தபடி வட-கிழக்கைப் பிரிப்பது என்கிற முடிவுக்கு வந்திருப்பது போல இத் தெரிவுக்குழுவும் சிறுபான்மையினருக்கு ஆபத்தான முடிவுகளுக்கே வந்தடையும் என நம்பப்படுகிறது.

→

## ஜனாதிபதி ஜே.ஆரா? விஜயதுங்காவா?

காமினி தலைமையிலான ஜ.ஐ.தே.முன்னணி ஐ.தே.கவுடன் இணைவது உறுதியாகி விட்டதாக ஜ.ஐ.தே.முன்னணி வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.


ஜ.ஐ.தே.முன்னணிக்கும், ஐ.தே.கவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக நடைபெற்றுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சையா அல்லது நிதியமைச்சையா ஜ.ஐ.தே.முன்னணிக்கு வழங்குவது என்கிற இறுதித் தீர்மானத்தை ஐ.தே.கட்சி எடுத்தால் இணைப்பு உறுதியாகி விடும் எனத் தெரிகிறது.

முன்னைய ஜனாதிபதி ஜே.ஆரின் வழிகாட்டலின் கீழேயே இப்பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றதாகவும், காமினியை ஐ.தே.க மீளவும்

→ 11

தீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் போக

## பொன்னாலைப் பாதையை திறந்து விட முடியாதா?



▲ கடவுளின் விதி



▲ தண்ணீர்! தண்ணீர்!!

90ம் ஆண்டு ஒப்பிரேஷன் வலம்புரியுடன் தீவுப் பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களைக் கொண்ட இந்தத் தீவுப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கினர் கூட தீவுப் பகுதியில் இல்லை. படையினரின் வருகையுடன் பெரும்பாலானோர் குடாநாட்டிற்குள் இடம் பெயர்ந்து விட்டார்கள்.

இடம் பெயராது இருந்தவர்களால் இப்போது தீவுப் பகுதியை விட்டு வெளியேற முடிவதில்லை. இவ்வாறு இடம் பெயராது/ பெயர முடியாது இருக்கும் 12,000 பேரினதும் நிலை தொடர்பாக அங்கு சென்று வந்த ந.ச.ச.கட்சி உறுப்பினர் தந்த தகவல்களைக் கீழே தருகிறோம்.

''தீவுப் பகுதி மக்களின் நிலைமைகளை அறிவதற்காக நானும் எமது கட்சியைச் சேர்ந்த அஜித்தும் சென்றிருந்தோம், எங்களுடன் கூடவே புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி, ஈரோஸ் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

தீவுப் பகுதியில் நாம் இறங்கியவுடன் எமது கண்ணில் பட்டது தரைமட்டமாக்கப்பட்டிருந்த கட்டிடங்களும் வீடுகளும்தான். அரச கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பிரதேசம் இப்படி இருக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை.

நாம் அங்கு தங்கியிருந்த ஒரு வார காலத்துள் அங்குள்ள மக்களுடன் உரையாடியதிலிருந்தும், நிலைமைகளை அவதானித்ததிலிருந்தும்; ரூபவாஹினியும் வானொலியும் தீவுப் பகுதி மக்கள் சுபீட்சமாக வாழ்கிறார்கள் என்று எவ்வளவு பொய்களை அவிழ்த்திருக்கிறது என்பதனைப் புரிய முடிந்தது.

மாதாமாதம் ரேஷன் கொடுப்பார்கள். அரிசி, மா, சீனி என்று ஒரு ஆளுக்கு 315/=. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கும் அதுதான். பத்துப் பேர் கொண்ட குடும்பத்திற்கும் அதுதான். மரக்கறி தேடியும் கிடைக்காத ஒரு பொருள்.

ஒரு மூடுண்ட உலகம் போலுள்ளது. தீவுப்பகுதிக்கு எந்தப் பத்திரிகையும் வருவதில்லை. பெரும்பாலான பாடசாலைகள் மூடிக் கிடக்கின்றன. நடக்கின்ற பாடசாலைகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் இல்லை. அனலை தீவில் 300 மாணவர்களுக்கு மூன்று ஆசிரியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். முன்பு 15 ஆசிரியர்கள் இருந்தார்கள். இன்னொரு பாடசாலையில் 130 மாணவர்கள். ஆசிரியர் ஒருவர் மட்டுமே. பல பாடசாலைகளில் அதிபர்களே இல்லை. இருக்கிற ஆசிரியர்களுக்கும் ஒழுங்காகச் சம்பளம் கிடைப்பதில்லை.


இந்தச் சம்பளப் பிரச்சினை ஆசிரியர்களுக்கானது மட்டுமல்ல. பெரும்பாலான அரச உத்தியோகத்தர்களுக்கும், ஓய்வூதியக்காரருக்கும் உள்ள பிரச்சினைதான். நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் பணிபுரியும் ஒருவர் 91ம் ஆண்டுக்குப் பின் தனக்குச் சம்பளம் கிடைக்கவில்லை என்றார். இன்னும் சில தபால் அதிபர்களுக்கு 15 மாதங்களுக்கு மேலாகச் சம்பளம் கிடைக்கவில்லை.

போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் நோயாளரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளது. இருக்கின்ற 12,000 பேருக்கும் வைத்தியம் செய்ய ஒரே ஒரு வைத்தியரே இருக்கிறார். எல்லாத் தீவுகளுக்கும் அவரால் போய்வர முடிவதில்லை. இன்னொரு வைத்தியசாலையில் மருத்துவத் தாதியே வைத்தியராகவும் கடமையாற்ற வேண்டிய நிலை. பிறக்கின்ற குழந்தைகளுக்குப் போடுவதற்கான தடுப்பூசிகள் எதுவும் இல்லை. மின்சாரம் இல்லாததால் குளிர்சாதனப் பெட்டிக்குள் இருக்கின்ற மருந்துகளை வைத்துப் பாதுகாக்க முடிவதில்லை. விசர் நாய்க் கடிக்கே மருந்தில்லாத நிலை. புங்குடுதீவில் இருந்த 818 பேரில் 64 பேர் இறந்து விட்டார்கள்.

90ம் ஆண்டுக்குப் பிறகு பிறப்போ,

→ 11

▼ அரச கட்டுப்பாட்டின் கீழ் தமிழர்கள் பறைத்தமிழர்களோ?



# எமவல்லத் தமிழினே?

## தமிழ் நாய்

இன்னொரு பொலிஸ் கதை.

கொழும்பின் புகழ் பூத்த நிதி நிறுவனம் ஒன்றின் முகாமையாளர்களில் ஒருவருக்கு நடந்தது இது.
தனது காரில் வேலைக்காக சென்று கொண்டிருந்தார் அவர். பின்புறமாக வந்த ஒரு மோட்டார் சைக்கிள் அவரது காரில் இடித்துவிட்டது.
காரை நிறுத்திவிட்டு இறங்கிப் பார்த்தார் அவர். காரின் பின்புற 'பஃவரில்' கண்ணுக்குத் தெரிகிற அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. கொம்பனிக் கார். பொலிஸில் 'என்றி' போடுவது அவசியம்.
இடித்தவரை பொலிஸ் நிலையம் வரைக்கும் வரும்படி கேட்டார். அல்லது அவரது அடையாள அட்டை இலக்கத்தை தரும்படி கேட்டார் இவர்.
அப்போதுதான் அந்த வினை தெறித்தது.
பொலிசுக்குப் போன அவருக்கு அங்கே என்றி போட அனுமதி கிடைக்கவில்லை. மாறாகப் பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள் அனைவரும் மாறிமாறி அவரைத் தாக்கினார்கள்.
பின்னால் வந்து இடித்தவன் ஒரு பொலிஸ்காரன் என்பதை அப்போது தான் அவர் புரிந்து கொண்டார்.
முடிந்தளவு நையப் புடைக்கப்பட்ட பின், 'பொலிஸ்காரனுக்கு எதிராக என்றி போடுகிற அளவுக்குத் திமிருள்ள தமிழ் நாய்களுக்கு இதுதான் நடக்கும்' என்று எச்சரித்து விட்டார்கள்.
அழுதபடி வெளியே வந்த அவருக்கு இன்னுமொரு எச்சரிக்கை விடப்பட்டது.
'இது பற்றி யாருக்காவது மூச்சு விட்டால், உன்ரை குடும்பம் கூட மிஞ்சாது!'
பயத்தில் உறைந்து போய்த் திரிகிறார் அந்த மனிதர்.
தனது கொம்பனிக்குக் கூட அறிவிக்காமல்.

## ஆடிக் கோலாகலமும் மூன்று குண்டுகளும்

1983 ஆடிக் கலவரத்திற்கு பின் பழைய கோலாகலத்துடன் திரும்பவும் ஆடிவேல் விழா நடாத்தப்பட்டது இம்முறை.
தெருவெல்லாம் பாற்செம்புகளுடன் பக்தர்கள் ஊர்வலமாகப் போனார்கள். கோவில்களில் பலத்த பாதுகாப்புகளின் மத்தியில் குடைராட்டினங்களும், பூசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகி இருந்தன.
தேர் ஊர்வலத்திற்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைவரும் காளாஞ்சி வைக்கவும் ஏற்பாடுகள் ஆகியிருந்தன.
பம்பலப்பிட்டி கோவிலைச் சுற்றிப் பொலிஸார் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.
மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தேரை இழுப்பதற்கு பாதுகாப்பு அளித்து நின்ற 'விடுதலை' இயங்கங்களை ஞாபகம் ஊட்டுகிறவிதத்தில் அவர்கள் நின்றிருந்தார்கள்.
ஆயினும் குண்டுகள் வெடித்தன.
ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று குண்டுகள். அடுத்தடுத்து. குண்டு வெடிப்புகள் அரசியல் காரணங்களுக்காக மட்டுமல்ல, தேர்த்திருவிழாவிலும் கூட நடக்கும் அளவுக்கு இருக்கிறது ஸ்ரீலங்கா!
''புலிகள் முதலிலேயே ஆடிவேல் விழாவைப் பெரிதாகக் கொண்டாட வேண்டாம்'' என்று சொல்லியிருந்தார்கள் என்று ஒருசாரார் கூறினர். 'இது திட்டமிட்டு இனக்கலவரத்தைத் தூண்டும் முயற்சி' என்றனர் இன்னொரு சாரார்.
இரு போட்டிக் குழுக்களுக்கிடையான நடவடிக்கை இது என்கிறது அரசு.
எப்படியோ, என்ன காரணத்துக்காக வெடித்தாலும் தலையில் கைவைத்து பீதியுடன் 'முழுசும்' நிலையில் தான் இருக்கிறது தமிழினம் என்பது அவர்களது தலைவிதி.

## கிளாலி - வாழ்விற்கான சாவுகள்

மீண்டுமொருமுறை கிளாலியில் கொலை.
இம்முறையும் பிடிபட்ட பின்னரே கொல்லப்பட்டதாகப் பேசப்படுகிறது.
காணாமல் போனவர்களில் சிலரின் விபரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை.
கிளாலிப் படகுகள் மீது தாக்குதலுக்கு அரசு தெரிவிக்கிற காரணம் 'தடை செய்யப்பட்ட பிரதேசத்தை தாண்டுகிறார்கள்' என்பதே.
தடை செய்யப்பட்ட பிரதேசத்தைக் கடப்பவர்களது குற்றத்திற்காக கொல்வது நியாயமென்றால், கடந்து வவுனியாவை நோக்கி வருபவர்களை எல்லாம் கைது செய்யவேண்டும்.
பாதையைத் திறப்பதில் அக்கறையில்லை; உயிர் போனாலும் பரவாயில்லை என்று வருபவர்களைத் தண்டிப்பதில் தான் அரசுக்குக் கவனம். பயணிகள் செத்தாலும் பரவாயில்லை. வேறு வழிக்குப் போக முடியாது என்பது புலிகளின் நிலைப்பாடு.
இவர்களுக்கு இது ஒரு அரசியல் அதிகாரப் பிரச்சினை.
மக்களுக்கோ அது வாழ்வுப் பிரச்சினை.
வடக்கு மக்கள் சாவதற்காக வாழவில்லை. அவர்கள் வாழ்வதற்காக சாகிறார்கள்.
தாம் வாழ்வதற்காக பிறரைச் சாகடிப்பவர்க்கு இது எங்கே விளங்கப் போகிறது?

## மனோ மாஸ்டர்

மனோ மாஸ்டர் புலிகளால் கொல்லப்பட்டு ஒன்பது வருடங்கள் ஓடி மறைந்து விட்டன.
மனோ மாஸ்டர் என அழைக்கப்பட்ட இவரது இயற்பெயர் து.பஞ்சலிங்கம். யாழ்ப்பாணம் கொம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
1970 களில் தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமிக்கத் தொடங்கிய காலகட்டத்தில் அதனுடன் தன்னை இணைத்துக் கொண்டவர்.
யாழ்.பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மனோ மாஸ்டர் தனது பட்டப்படிப்பை உதறி விட்டு புலிகளோடு சேர்ந்து கொண்டவர். 1980களின் ஆரம்பத்தில் புலிகள் ரெலோவுடன் சேர்ந்த போது இவரும் அதனுடன் இணைந்து கொண்டார்.
குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் கைதானதைத் தொடர்ந்து பிரபாகரன் தலைமையிலானோர் வெளியேறி மீண்டும் புலிகள் இயக்கத்தைக் கட்ட முனைந்த போது மனோமாஸ்டர் ரெலோவுடனேயே தொடர்ந்திருந்தார்.
புலிகளது பாஸிச போக்கில் வெறுப்படைந்த மனோ மாஸ்டர் ரெலோவை அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் கட்டமைக்க கடுமையாக உழைத்தார்.
வடமராட்சியைச் சேர்ந்த பெரும்பாலானோர் ரெலோவை நோக்கி ஈர்க்கப்பட மனோ மாஸ்டரே காரணமாயிருந்தார்.
ஆனால் துரதிர்ஷ்டவசமாக மனோ மாஸ்டர் எதிர்பார்த்ததற்கு மாறாக புலிகளை எந்தக் காரணத்திற்காக நிராகரித்தாரோ அதே அராஜகமும், ஜனநாயக மறுப்பும் ரெலோ



வினுள் தலைதூக்கிய போது ரெலோவை விட்டும் அவர் வெளியேறுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.
ரெலோவை விட்டு விலகியிருந்தாலும் கூட உள்ளமைப்பில் ஜனநாயகத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் கொண்ட அமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியிலீடுபட்டிருந்தார்.
இந்தவேளை மனோ மாஸ்டரின் இருப்பும், செயற்பாடும் வடமராட்சியில் தமது ஆதிபத்தியத்திற்கு தடையாக இருக்குமெனக் கருதிய புலிகள் 22.07.1984 அன்று அவரை படுகொலை செய்தனர்.
வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த மனோ மாஸ்டரை முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி கிட்டுவே துரத்திச் சென்று சுட்டுக் கொன்றதாகப் பேசப்பட்டது.
தமிழ் மக்களின் விடுதலையை நேசித்த மனோ மாஸ்டர், இயக்கங்களது ஜனநாயக மறுப்பையும் அராஜகத்தையும் எதிர்த்துப் போராடிய மனோ மாஸ்டர் அதன் எதிரிகளாலேயே கொல்லப்பட்டது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

''மரப்பிடிக்கும்
இரும்புக் குழாய்க்கும்
மனிதாபிமானம்
இருக்க நியாயமில்லை
அதற்காக
மனிதத் தோலுக்குமா?''

-பரந்தாமன்



### யானை இல்லாத சேவல்

✱ முடிந்தால் யானை இல்லாமல் சேவலால் வெல்லுங்கள்.
இ.தொ.காவிற்கு ஜ.ஐ.தே.முன்னணியின் மகளிர் பிரிவு அமைப்பாளர் தமிழ்மணி சவால் லங்காதீப 16.7.93

### உருவாக்கியது யார்?

✱ இனப் பிரச்சினையை உருவாக்கியவர்கள் அதிகாரவெறி பிடித்த அரசியல்வாதிகள்.
மாதுலுவாவே சோபித தேரர் லங்காதீப 16.7.93

### ஐ.தே.கவுக்குப் போகவா?

✱ பத்து இலட்சம் மக்கள் ஜ.ஐ.தே. முன்னணிக்கு வாக்களித்தது ஐ.தே. கவுக்குப் போக அல்ல.
எதிரிவீர பிரேமரத்ன மேல் மாகாண சபை உறுப்பினர் லங்காதீப 16.7.93

### ஆதரிக்கிற சுதந்திரம்

✱ ஒரு சுதந்திரமான கட்சி என்ற வகையில் எமது மனச்சாட்சிக்கும் தேசிய நலனுக்கும் ஏற்ப எந்தக் கட்சியையும் ஆதரிக்கும் சுதந்திரம் எமக்கு உண்டு.
ஜ.ஐ.தே.மு செயலாளர் ஜி.எம். பிரேமச்சந்திர தினகரன் 2.8.93

### வெல்லாமல் போன ....

✱ நான் பதவியில் இருந்திருந்தால் போரை வெல்லாமல் இந்தியப் படையைத் திரும்பிச் செல்ல விட்டிருக்க மாட்டேன்.
ஜே.ஆர். லங்காதீபவில் 29.7.93

### வாபஸ் செய்ய ஆர்ப்பாட்டம்

✱ ஜே.ஆர்.- ராஜீவ் ஒப்பந்தத்தை உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்.
பிக்குகள் தலைமையிலான ஐந்து அமைப்புகள் மக்களிடம் கோரிக்கை. திவயின 29.7.93

### குட்டி அமெரிக்கா

✱ சிலாபத்திலுள்ள வொய்ஸ் ஒப் அமெரிக்கா அப்பிரதேசத்தை 'குட்டி' அமெரிக்காவாகவும், வல்லரசுக் காலனியாகவும் மாற்றி வருகிறது.
பிஷப் மாக்கஸ் பெனாண்டோ வீரகேசரி 2.8.93

### எதிர்க்க வேண்டியது V.O.T. V.O.A. அல்ல.


✱ கத்தோலிக்க மதகுருமாரும், ஏனையோரும் கிளர்ந்தெழ வேண்டியது யாழ்ப்பாணத்திலிருந்து ஒலிபரப்பாகும் புலிகளின் குரலுக்கு எதிராகவே அன்றி வொய்ஸ் ஒப் அமெரிக்காவிற்கு எதிராக அல்ல.
ஏ.ஜே.ரணசிங்ஹ திஐலண்ட் 2.8.93

### ஜானகபுர முரட்டுத் தாக்குதல்

✱ ஜானகபுர மீதான புலிகளின் தாக்குதல் சிங்கள இனத்தை இல்லாதொழிப்பதுடன், தமிழ் இனத்திற்குச் சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும் செய்யப்பட்ட ஒரு முரட்டுத்தனமான நடவடிக்கையாகும்.
சிங்களப் பெண்கள் நலன்புரி முன்னேற்ற அமைப்பு திவயின 5.8.93

### கொப்பேகடுவவுக்கு வீர வணக்கம்

✱ ''கொப்பேகடுவ போன்ற நாட்டிற்காக உயிர் கொடுத்த வீரர்களை நினைவு கூர்வோம். எம்மீது பலவந்தமாகத்திணிக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஆறு வருடங்கள். கொப்பேகடுவ கொல்லப்பட்டு கடந்த வருடம் ஓகஸ்ட் எட்டாம் திகதியாகும். இவ்விரண்டு சம்பவங்களும் ஒரே சம்பவத் தொடர்ச்சியாகும்''. எனத் தேசாபிமான அமைப்புக்கள் நான்கு சேர்ந்து விநியோகித்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
திவயின 9.8.93



கனடா, ரொறன்ரோ மாநகரில் தமிழ் நூல்களின் கண்காட்சி ஒன்று இந்த வருடம் ஒக்டோபர் மாதம் இடம்பெற உள்ளது. அதில் தமிழ் நூல்களின் விற்பனையும் இடம் பெற உள்ளன.
''காலம்'' சஞ்சிகை வெளியீட்டாளர்களான செல்வம், மூர்த்தி ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இக் கண்காட்சி/நூல் விற்பனையில் இடம் பெற விரும்பும் வெளியீட்டு நிறுவனங்கள், எழுத்தாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
SELVAM/MOORTHY,
3479, ST.CLAIR AVENUE EAST,
APT: * 302
SCARBOROUGH, ONTARIO
M1K 1L2,
CANADA
செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக நூல்களைக் கையளிக்க விரும்புபவர்கள் சரிநிகர் அலுவலகத்தில் கையளிக்கலாம்.

நன்றி - நூலகத்திட்டம்





# ஜனாதிபதியை யார் தெரிவு செய்வது?

சிறீலங்கா அரசு மாகாணசபைத் தேர்தல் முறைகள் தந்த படிப்பினையைத் தொடர்ந்து அரசியலமைப்புக்குப் பிரதானமாக இரு திருத்தங்களைக் கொண்டுவர முயற்சி செய்கின்றது. ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் மூலம் தெரிவு செய்தல்; விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் மாற்றம் கொண்டு வருதல் என்பனவே அவ்விரு திருத்தங்களுமாகும். இத்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் மக்களிடம் இது தொடர்பான கருத்தினைத் தெரிவிக்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுமுள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இது வெறும் அரசியல் அமைப்பு திருத்தமாகத் தெரிந்தாலும் நுணுக்கமாகக் கவனிக்கும் போது இது சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் உரிமைகளைப் பறிப்பதற்கே திட்டமிட்ட வகையில் கொண்டு வரப்பட்டதென்பது தெளிவாகும்.

1978 அரசியலமைப்புத் திட்டத்தின்படி ஜனாதிபதி மக்களினால் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்ற போது, சிறுபான்மைத் தேசிய இனங்களின் வாக்குகளும் அதற்கு அவசியமாகின்றது. சில வேளைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாகக் கூட அவை அமைந்து விடுவதற்கு வாய்ப்புண்டு. இதனால் பேரினவாதக் கட்சிகள் என்னதான் தமக்குள்ளே பேரினவாதத்தைக் கொண்டிருந்தாலும் அதனை அடக்கி வாசிக்கவும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு சில சலுகைகளை வழங்கவும்வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகின்றது. சென்ற ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க மாகாணசபை முறையை அறிமுகப்படுத்த முன்வந்ததும் நாடற்றோர் பிரச்சினையைத் தீர்த்து எல்லோருக்கும் பிராஜாவுரிமை கொடுக்க முன்வந்ததும் ஸ்ரீ.ல.சு.க தமிழர்களுக்கு மாநில சுயாட்சியைக் கொடுக்கப் போவதாக அறிவித்து அது தொடர்பாக, வன்னிக் காட்டில் புலிகளைச் சந்தித்து பேசுவதற்கு முனைந்ததும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கேயாகும். இதுபற்றி அனுரா ஒருதடவை நேரடியாகவே கூறியிருந்தார். அவர் கட்சிக்குள் உள்ள இனவாதிகளைப் பார்த்து ''நீங்கள் இனவாதம் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு சிறுபான்மைத் தேசிய இனங்களின் வாக்குகளும் அவசியமானவை என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது'' என எச்சரித்திருந்தார்.

இன்று இவற்றை விட பேரினவாதக் கட்சிகள் எதிர் நோக்குகின்ற இன்னோர் பிரச்சினை வடக்கு கிழக்கில் தேர்தல் நடாத்த முடியாத நிலையாகும். யுத்த நிலை தொடரும் நிலையில் இருப்பதால் இப்போதைக்கு அங்கு தேர்தல் நடாத்தக் கூடிய நிலை இல்லை. தேர்தல் நடைபெற்றாலும் ஐ.தே.கவுக்கோ ஸ்ரீ.ல.சு. கட்சிக்கோ மக்கள் வாக்களிக்கக் கூடிய நிலை இல்லை. இதனால் வடக்கு-கிழக்கில் தேர்தல் நடாத்தாமலே ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை ஒன்றை உருவாக்க இரு பேரினவாதக் கட்சிகளும் விரும்புகின்றன.

ஜனாதிபதி தேர்வு முறையில் திருத்தம் கொண்டு வருவதற்கான மற்றோர் பிரதான காரணி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் ரீதியாகப் பெற்று வரும் வளர்ச்சியாகும். கடந்த இரு ஜனாதிபதித் தேர்தல்களிலும் ஐ.தே.க வெற்றி பெறுவதற்குப் பிரதான காரணியாக அமைந்தது இ.தொ.காவின் வாக்குகளேயாகும். இந்நிலை இ.தொ.காவையும் தொண்டமானையும் நன்கு வலுப்படுத்தி தொண்டமானின் பேரம் பேசும் வலிமையையும் அதிகரிக்கச் செய்துள்ளது. தொண்டமான் இச் சக்தியைப் பயன் படுத்தி இந்திய வம்சாவளியினரில் தனது வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் நலன்களைப் பேணும் முயற்சிகளில் இறங்கியதோடு இடைக்கிடை தனது ஆதரவுப்பலமாக இருக்கும் மலையக மக்களின் நலன் பேணும் விடயங்களையும் மேற்கொண்டிருந்தார். தொண்டமானின் வளர்ச்சியைத் தவிர்த்து அவரின் பேரம் பேசும் சக்தியைக் குறைக்க வேண்டுமாயின் ஜனாதிபதியின் தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டியது இரு பேரினவாதக் கட்சிகளுக்கும் அவசியமாக உள்ளது.

உண்மையில் தொண்டமானினதும் இ.தொ.காவினதும் வளர்ச்சி அரசைப் பொறுத்த வரையில் ஒரு திரிசங்கு சொர்க்க நிலையையே தோற்றுவித்துள்ளது. தொண்டமானையும் இ.தொ.காவையும் ஒரு எல்லைக்கு மேல் பலவீனப்படுத்தினால் தீவிரவாத இயக்கங்கள் மலையகத்தில் தோன்றி விடுமோ என அஞ்சுகின்றது. இது தொடர்பாக வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியை பலவீனப்ப'டுத்தியபடியால் தீவிரவாத இயக்கங்கள் தோன்றியமை அதற்கு நல்லதொரு படிப்பினையாக உள்ளது. மலையகத்தில் தீவிரவாத இயக்கத்தின் தோற்றத்திற்கான சமிஞ்சையாக ம்லையக மக்கள் முன்னணியின் தோற்றத்தை இவர்கள் கருதுகின்றனர். மறுபக்கத்தில் இ.தொ.காவையும் தொண்டமானையும் வளர விட்டால் அதனுடைய பேரம் பேசும் சக்தி அதிகரித்து தனது பேரினவாத ஆட்சிக்கு இடைஞ்சலாகி விடும் என்றும் அஞ்சுகின்றனர். இதனால் ஓர் எல்லை வரை இ.தொ.காவை பலவீனப்படுத்துவதற்கு உதவும் என ஜனாதிபதி தேர்வு முறையிலான மாற்றத்தினைக் கருதுகின்றனர்.

இந்த ஜனாதிபதி தேர்வு முறைக்கான திருத்தம் அமுலாகுமாக இருந்தால் அரசும் ஸ்ரீ.ல.சு.கட்சியும் தனது அச்சங்களைக் குறைத்து இனவாதத்தை இன்னும் கட்டவிழ்த்து விடலாம். தேசிய இனங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையையும் அதிகரிக்கலாம். ஆக, அடக்கி வாசித்த இனவாதத்திற்கு இத் திருத்தத்தின் மூலம் விடுதலை கிடைக்கும்.

இரண்டாவதான விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் திருத்தம் என்பது சிறுபான்மைத் தேசிய இனங்களின் அதிகரித்து வரும் அரசியற் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்காக கொண்டுவரப்படுகின்ற முயற்சியாகும். அதுவும் குறிப்பாக தென்னிலங்கையில் அதிகரித்து வரும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்காகவே கொண்டு வரப்படுகின்றது. இது தொடர்பாக நுவரெலியா மாவட்டத்திற்கும் கொழும்பு மாநகர சபைப் பகுதிக்கும் பேரினவாதக் கட்சிகள் அஞ்சுகின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மாகாண சபைத் தேர்தலில் மொத்தம் 17 இடங்களில் 10 இடங்கள் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குக் கிடைத்துள்ளன. இது பேரினவாதக் கட்சிகளுக்கு அதிர்ச்சியையும் அச்சத்தையும் கொடுத்துள்ளது. எதிர்காலத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அரசியல் ஆதிக்கம் தமிழர்களின் கைகளுக்குச் சென்று விடும் என்பது இவர்களது அச்சமாக உள்ளது. இது தொடர்பாக மத்திய மாகாண சபையில் ஒரு ஆளும் கட்சி உறுப்பினரே எதிர்க் கட்சி அரசியல் வாதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

மற்றையது கொழும்பு மாநகர சபைப் பகுதி பற்றியது. கொழும்பு மாநகர சபைப் பகுதிக்குள் தமிழ் மக்களின் தொகை இன்று என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றது. 90இல் யுத்தம் ஆரம்பித்த பிறகு வடகிழக்கிலிருந்து குடிபெயர்ந்து நிரந்தரமாக கொழும்பில் வசிக்கும் தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது.

இவ்வெண்ணிக்கைக்கு ஏற்றபடி அரசியல் பிரதிநிதித்துவம் வழங்குவதைத் தவிர்க்க வேண்டுமாயின் தம்முடைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டியது அவர்களுக்கு அவசியமாகின்றது. இம்மாற்றம் பழைய மாதிரி தேர்தல் தொகுதிகளை கொண்டு வரும் முறையாகவே அனேகமாக இருக்கலாம். தேர்தல் தொகுதிகளை அமைக்கும் போது தமிழ்மக்கள் எந்தத் தொகுதியிலும் பெரும்பான்மையாக வராதவகையில் அமைப்பதற்கு முயற்சிக்கலாம். இதற்காக தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதி பல வகைகளிலும் கூறுபோடப்பட்டு சிங்களப் பகுதிகளோடு இணைக்கப்படலாம். நுவரெலியா மாவட்டத்தை இவ்வாறு கூறுபோடுவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

உண்மையில் இவ்விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையினாலேயே கொழும்பு மாவட்டத்தில் செல்லச்சாமி தெரிவு செய்யப்பட்டார். அதற்கு முதல் கொழும்பு மாவட்டத்திற்கென தமிழ் பிரதிநிதி பாராளுமன்றத்தில் இருக்கவில்லை. இதே போன்றே நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் இருந்து சிவலிங்கம், சென்னன் போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளூராட்சி தேர்தலிலும், மாகாணசபைத் தேர்தலிலும் பல தமிழர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முஸ்லீம்களிலும் பலர் இத்தேர்தல் முறையினாலேயே தெரிவு செய்யப்பட்டனர். களுத்துறையிலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் முஸ்லீம் காங்கிரசிற்கு மாகாண சபையில் பிரதிநிதித்துவம் இருக்கிறதென்றால் இத் தேர்தல் முறையே காரணமாகும்.

எனவே நுணுக்கமாக அவதானிப்பின் இவ்விரு திருத்தங்களும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கெதிராக குறிப்பாகத் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டவையே.

பரந்தாமன்



## ஜோர்ஜ் கீற்

இலங்கை ஓவியர்களுள் பலராலும் அறியப்பட்டவர் ஜோர்ஜ் கீற். தனது 92வது வயதிலும் ஓவியங்களைப் படைத்துக் கொண்டிருந்தவர், ஜூலை 31ம் திகதி இறந்தார் என்ற செய்தி ஓவிய ரசிகர்களுக்கு அதிர்ச்சி தருவதாகவே இருந்தது. பௌத்த, இந்து தத்துவங்கள் பொதிந்த இவரது படைப்புக்கள் இலங்கை வாழ்வையும் மக்களையும் பதிவுகளாய் என்றும் வாழ வைப்பவை. மேற்கத்தைய நவீன பாணிகளை நன்கு தன் படைப்புகளில் கையாண்டவர் ஓவியர் கீற். இவரது ஓவியங்கள் இலங்கை மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றதுடன், இலங்கை ஓவிய இரசிகர்களுக்கு நவீன பாணிகளின் அறிமுகமும் பரவலாக ஏற்பட கீற்றின் ஓவியங்களே காரணமாக இருந்ததெனலாம்.

காலத்திற்குக் காலம் கீற்றின் படைப்புக்கள் பல்வேறு விடயங்களையும் வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆரம்பத்தில் கண்டிய இயற்கைக் காட்சிகளையும் பௌத்த விடயங்களையும் இவரது ஓவியங்களில் காண முடிந்தது. பின்னர் இந்திய, இந்து தத்துவங்களை இவரது படைப்புக்களூடாகக் கொண்டு வந்திருந்தார். இருந்தாலும், 'பெண்ணின் சித்திரிப்பு' கீற்றைத் தனித்துவமாக்கி அவரது படைப்புகளிற்குத் தனிச் சுவை கொடுப்பதாக அமைந்திருந்தது.

இலங்கை ஓவியர்களுள் நீண்டகாலம் வாழ்ந்த, உலகப் புகழ் பெற்ற ஓவியர் கீற்றின் வாழ் நாட்கள் மிகப் பெறுமதியானவை. மேலும், இலங்கை ஓவிய மரபில் இரண்டு சந்ததியினருக்கு ஓர் இணைப்பாகவும் இவர் இருந்திருக்கிறார்.

ஓவியத்துறையில் சிறப்பாக, பூரண வெற்றியுடன் வாழ்ந்த ஓவியர் ஜோர்ஜ் கீற்றின் வாழ்வு இலங்கையின் இளைய சந்ததியினருக்கு ஓர் நம்பிக்கையாக அமையும் எனக் கூறலாம்.

மாதவி



நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாணம் இன்று - 6

## நாங்கள் சாகிறம்; உனக்குப் பவுணுக்குப் பஞ்சமோ?

என்ன சொன்னேன்?
கந்தையா ஆசிரியர் பற்றிய கதை என்றா? பாவம்.
ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர். மனைவி - பிள்ளைகள் இருக்கின்றனர். ஒரு மகன் ஏதோ ஒரு வெளிநாட்டில். அவன் ஒரு சதம் கூட வீட்டுக்கு அனுப்புவதில்லை. அவன் உயிருடன் இருக்கிறானோ என்பது கூடக் கந்தையாவிற்குத் தெரியாது.

எல்லோரும் கட்டுவதைப் போல, கந்தையாவின் முறை வந்தபோது அவரும் தனக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு பவுண்களையும் கட்டினார். ஆனால் புலிகள் விடவில்லை. வெளிநாட்டில் இருக்கும் மகனுக்காக மேலதிகப் பவுண் கட்ட வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள். கந்தையா தனக்கும் மகனுக்கும் உள்ள தொடர்பின்மையையும், தான் இந்த இரண்டு பவுண் கட்ட எடுத்துக் கொண்ட சிரமத்தையும், வயதுக்கு வந்த மகள் கலியாணம் முடிக்கக் காத்திருப்பதையும் எடுத்துக் கூறினார்.
புலிகள் கேட்கவில்லை. ஒரு வாரம் அவகாசம் கொடுத்தார்கள்.
அவர் என்ன செய்வார்? பாவம். எங்கு போவார்?
அவருக்குச் சில நம்பிக்கைகளும் இருந்தன. 65 வயதுக்கு மேலாகி விட்டது. ஆகவே பங்கருக்கு அனுப்ப மாட்டார்கள். மற்றது இப்போது வெருட்டுவார்கள். ஆனால் பிறகு மறந்து விடுவார்கள்.
ஆனால் அவரது நம்பிக்கை பொய்த்து விட்டது. ஒரு வாரத்தின் பின் புலிகள் வந்தனர். பிரதேசச் செயலகத்திற்கு வரச்சொன்னார்கள்
கந்தையாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.
கண்ணியமானவர். ஆசிரியராக இருந்தமையால் வாழ்வினை ஒழுங்குபடுத்திக் கொண்டவர் அதிர்ந்து பேசத் தெரியாது. மாணவர்களுக்குக் கல்வியூட்டியவர் என்பதனால், மாணவர்களைத் தமது ஆளுமைக்குள் உட்படுத்திக் கொண்டவர்.
பிரதேசச் செயலகத்திற்குப் போன போது உள்ளே அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார்.
கந்தையா ஆசிரியருக்கு இது அவமானம். மேலும் ஒரு வாரம் அவகாசம் கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். கூனிக் குறுகி வெளியேறினார்.
எதிரே காணுகின்ற ஒவ்வொருவரையும் பார்ப்பதற்கு கூச்சப்பட்டார். கலவரப்பட்டார்.
ஒரு வாரத்தில் இரண்டு பவுண் கட்ட வேண்டும். எங்கே போவார்? இல்லாத பொருளை எங்கே தேடி அலைவார்? கடவுளைப் போல, பவுணும் அவருக்கு ஒளித்துக் கொண்டது.
ஒரு வாரத்தின் பின்னர் பிரதேசச் செயலகத்திற்கு மீண்டும் போனார். உள்ளே அடைக்கப்பட்டார். அவர் மகனிலும் சிறுவனான ஒருவன் அவரைச் சித்திரவதை செய்தான். அவர் படிப்பிக்கிற நாட்களில் முதலாம் வகுப்பில் படித்திருக்கக்கூடிய பையன் அவர் முகத்தில் குத்து விட்டான். கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டான். காலால் உதைத்தான். பெல்ட்டால் அடித்தான். ''நாங்கள் சாகிறம்; உனக்குப் பவுணுக்குப் பஞ்சமோ?''
அதிர்ந்து பேசத் தெரியாதவர். அதிர்ந்து போனார். கந்தையா ஆசிரியர் மானஸ்தர்.
பக்கத்து வீட்டு கனகசபை பிணையில் அவரை விடுவித்துச் சென்றார். விடுவித்த போது ''வாற வியாழககிழமை இரண்டு பவுணையும் கட்டிப் போட வேணும்.'' என்றான். அவனும் சிறுவன்.
கந்தையா ஆசிரியர் இனி மண்ணைக் கிண்ட வேணும். தங்கச் சுரங்கத்தை கண்டு பிடித்தாக வேணும். அப்பொழுதுதான் அவர் இரண்டு பவுணென்ன; இருபது பவுணும் கட்டலாம்.
நாளைக்கு வியாழக்கிழமை. கந்தையா ஆசிரியர் மானஸ்தர் என்று முன்னர் சொன்னேன் அல்லவா?
புதன்கிழமை மதியம் சாப்பிட்டு விட்டு, ஆற அமர ஒரு கடிதம் எழுதினார்.
அன்று மாலை அவர் இறந்து விட்டார்.
தான் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணம் அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.
தற்கொலைச் செய்தி கேள்விப்பட்டவுடன் புலிகள் செய்த முதலாவது வேலை - கந்தையா எழுதிய கடிதத்தைக் கைப்பற்றியது தான்.
கதை அவ்வளவுதான்.
மேலும் இதனைப் பற்றி நான் என்ன உரைக்க?
உரைத்துத்தான் என்ன பிரயோசனம்?
எல்லாம் வழமைப்படி.
இது அளவெட்டியிலும் அப்பகுதியில் இருந்தவர்களைத் தவிர இரண்டாம் பேருக்கும் தெரியாது.
ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் பேரிற்கும் தெரிந்த விடயம் புலிகளின் இராணுவ முகாம் தாக்குதல் வெற்றியும், அதில் வீரமரணமடைந்த போராளிகளும், இலங்கை அரசின் தாக்குதல்களில் பலியான அப்பாவிப் பொதுமக்களின் பெயர்களும் இவை யாவருக்கும் உடனுக்குடன் தெரியப்படுத்தப்பட்டன.
ஹெலியும், பொம்மர்களும் அடிக்கடி சுற்றின. பொம்மரின் தாக்குதலுக்கு விழுந்து படுத்து ஓரளவுக்குத் தப்பித்துக் கொள்ளலாம். ஹெலி சுடத் தொடங்கினால் கடினம் தான்.
எதையும் எதிர்க் கொள்ளத் தயாரானார்கள் மக்கள்.
ஹெலி சுடத் தொடங்கினால் அயலிலுள்ள பெரிய மரத்தைக் கட்டிப் பிடித்தபடி, ஹெலியின் போக்குக் கேற்ப, மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து தப்பிவிடலாம். மரமில்லாத வெளியினில் கடினம் தான்.
ஒரு முறை கொக்குவிலில் பொம்மர் குண்டுகளை ஏவிய போது சைக்கிளில் வந்த வயோதிபர் வேட்டி தடுக்கியதால் இறங்க முடியாது குண்டுக்குள் அகப்பட்டு இறந்து போன கதையும் உண்டு.
சைக்கிளில் போகின்ற போது ஒரு மைலிற்கு அப்பால், ஹெலி சுற்றிச் சுற்றிச் சுடுவதினையும், பொம்மர் குத்திக் குத்திக் குண்டு போடுவதினையும் பார்த்து ரசித்தபடி மக்கள் சைக்கிளில் பயணம் செய்வார்கள்.
தம் தலைக்கு மேல் வந்தால் தான் தப்புவதற்கு வழி தேடுவார்கள். அவரவர் சோலி அவரவர்களுக்கு. எதையும் எதிர்கொள்ளப் பழகி விட்டார்கள்.
ஆனால் பயம் கொண்ட மனிதர்களும் இருந்தார்கள். ஹெலி போவதினைப் பார்த்து மூத்திரம் வடிக்கிற ஐந்து வயதுச் சிறுவனும் என் வீட்டின் அயலில் இருந்தான்.
இங்குள்ள மக்கள் இரவில்தான் எதிரி தம்மைச் சூழ்ந்திருப்பதனை உணர்ந்தார்கள்.
நிலவில்லா நாட்கள் இருளானவை. அயலில் நிற்பவனையும் தெரியாத கும்மிருட்டு. டைனமோ போட்டே சைக்கிள் ஓட வேண்டும். டைனமோ இல்லாத சைக்கிள் காரர் தூரத்தில் லைற்றுடன் போகின்ற சைக்கிளைப் பார்த்து இறுக்கி மிதித்து லைற் உள்ள சைக்கிளுடன் சேர்ந்து போவார்கள்.
எப்ப பூரணை? எப்ப அமாவாசை? இது எத்தினையாம் பிறை? இது வளர் பிறையா? தேய் பிறையா? இங்கு இது யாவருக்கும் தெரிந்த விடயம்.
முன்னர் குறிப்பிட்டிருந்தேன். நிலவைப் பார்த்துப் பயணத்தைத் தீர்மானித்தார்கள்.
இப்போது முன்பிறைக் காலமா? மத்தியானமே புறப்படு. வெளிச்சத் தோடை போட்டமெண்டால், பன்னிரண்டு, ஒரு மணிக்குத் தானே நிலவுபடும். அதுக்கிடையிலை கிளிநொச்சிக்குப் போய்ச் சேர்ந்திடலாம். அங்கை கந்தசாமி கோயிலிலை படுத்திட்டு விடிய எழும்பினால் காலமை பத்து மணிக்கு வவுனியாவிற்குப் போய்ச் சேர்ந்திடலாம்.
இது தேய் பிறைக் காலம் தானே? நான் சொல்றதைக் கேள். இப்படு. சரியா ஒரு மணிக்கு எழுப்பி விடுறன், போவம். நிலவு வெளிச்சத்திலை சைக்கிள் விழக்கலாம். யானை நிண்டாலும் தெரியும். விடியக் கிளிநொச்சியிலை, பகலோடை பகலா வீட்டைப் போய்ச் சேர்ந்திடலாம்.



நிலவே சகலத்துக்கும் ஆதாரம். நிலவில்லா நாட்களில் அச்சம் தரும் எதிரியின் இருப்பை உணர்ந்தார்கள். சுன்னாகத்தில் இருக்கிறாயென்றால் சுற்றிவர எதிரியின் முகாமிலிருந்து வெளிச்சம் தெரியும்.
பலாலி, காங்கேசன்துறை, மாதகல், காரைநகர், அராலி மண்டைதீவு, கேரதீவு என்று இராணுவ முகாம்களில் இருந்து வெளிச்சம் வானத்தில் படரும்.
குடா நாட்டின் எல்லாப் பகுதியும் இருண்டிருக்க முகாமில் மாத்திரம் வெளிச்சம் தெரிய, எதிரி எம் அருகில் இருக்கிறான் எனும் நிதர்சன உண்மை மக்களுக்குப் புரியும். எதிரியின் இருப்பை அச்சத்துடன் நோக்கினார்கள்.
எப்பொழுதும் எதிரி எங்களை ஆக்கிரமிக்கலாம்.
இரவினில் இதனை மனதில் உணராதவர்கள் யார்?

..வரும்...

அருணா பரமேஸ்வரன்

---

## கூரிய வார்த்தை எழுத விடு

# சினிமா என்றால் ?...

கடந்த யூலை 25ம் திகதி வெள்ளவத்தை தமிழ் சங்கத்தில் **விபவியின்** ஆதரவில், கலந்துரையாடல் நடைபெற்றது. **சினிமாவின் அடிப்படை இயல்புகள் - தமிழ்ச் சினிமாவில் அதன் பிரதிபலிப்புக்கள்** என்பதே அக்கலந்துரையாடலின் தலைப்பு. சினிமாவின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாகவும், தமிழ்ச் சினிமாவில் அதனுடைய பிரதிபலிப்புக்கள் தொடர்பாகவும், **அ.ரவி** அவர்கள் சில கருத்துக்களைக் கூறிக் கலந்துரையாடலைத் தொடக்கி வைத்தார். **அருவி** ஆசிரியர் **பாஸ்கரன்** கலந்துரையாடலைத் தொடர்ந்தார்.
சினிமாவின் அடிப்படை இயல்புகள் தொடர்பாக **அ.ரவி** தெரிவித்த கருத்துக்கள் சுவாரசியமானவை. சில குறிப்பிடத்தக்க அம்சங்களை வலியுறுத்தினார். **ஒளிப்பதிவு, திரைப்படப் பிரதி, படத் தொகுப்பு** இம்மூன்றுமே ஒரு சினிமாவின் மிக அடிப்படையான அம்சங்கள் என விபரித்தார். **''ஒரு படத் தொகுப்பாளரின் (எடிட்டர்) மேசையிலேயே சினிமா உருவாகிறது; முழுமை பெறுகிறுது''** எனும் கருத்து அவதானிப்பிற்குரியது.
ஆனால் தமிழ்ச் சினிமாவில் அதன் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு இருந்தன என்பதனை அ.ரவி அவர்கள் போதிய ஆதாரங்களுடன் விளக்கத் தவறிவிட்டார். மேற்குறித்த சுவாரசியமான அம்சங்களுடன், தமிழ்ச் சினிமா எவ்வாறு இயைபுறுகிறது என்பதினை தகுந்த உதாரணங்களுடன் விளக்கியிருந்தால் கலந்துரையாடல் முழுமை பெற்றிருக்கும்.
மற்றும் அவரது கருத்துக்களில் முக்கிய குறைபாடாகக் கருதத்தக்கது தமிழ்ச்சினிமாவின் முக்கிய நெறியாளர்-சிலரைப் பட்டியலிட்டிருந்தார். **எஸ். பாலச்சந்தர், பீம்சிங், ஸ்ரீதர், பாலச்சந்தர், பாரதிராஜா, மகேந்திரன், பாலுமகேந்திரா, மணிரத்தினம்** ஆகியோர் தமிழ்ச்சினிமாவின் முக்கிய நெறியாளர் என இவர் அறிவித்தார். சினிமாவின் அடிப்படை இயல்புகளில் இவர்கள் எவ்வாறு தம்மை இனங்காட்டினார்கள் என ஒரு குறிப்பும் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. இதுவும் முக்கிய குறைபாடு.
அது மாத்திரமன்றி, ஓரிரு சினிமாக்கள் தான் எடுக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ்ச் சினிமாவை தரம் உயர்த்திய நெறியாளர் பற்றி ஒரு குறிப்பும் கொடுக்கப்பட்டிருக்க வில்லை. **நிமாய் கோஷ்** (பாதை தெரியுது பார்) **ஜெயகாந்தன்** (உன்னைப் போல் ஒருவன்) **சிங்கீதம் சீனிவாசராவ்** (திக்கற்ற பார்வதி) **தாகம்** (நெறியாளர் பெயர் மறந்து விட்டது.) **ராமு காரியத்** (கரும்பு) **ஜோன் ஏபிரகாம்** (அக்ரஹாரத்தில் கழுதை) **ஜெயபாரதி** (குடிசை) **ருத்ரையா** (அவள் அப்படித்தான்) முதலியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இப்படிப் பட்டியலிடுகின்ற போதுதான் தமிழில் ஓரளவுக்காயினும் நல்ல சினிமாக்கள் வந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. இது குறித்தும் அக் கலந்துரையாடலில் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
**சினிமா நெறியாளர் சர்வாதிகாரி** எனும் கருத்தும் இங்கு குறிப்பிடப்பட்டது. கமெராக் கோணங்கள் முதலான தொழினுட்ப ரீதியாகவே நெறியாளர் சர்வாதிகாரி எனக் கருத்து முன்வைக்கப்பட்டது. இக்கருத்துத் தொடர்பாக விவாதம் இருந்தது. பொதுவாக எல்லாக் கலைப்படைப்புகளிலும், கலைஞர்கள் தம் பார்வைக் கோணத்திலேயே கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள் எனும் கருத்துக் கவனிக்கப்பட்டது. ஆகவே கலைஞர்கள் சர்வாதிகாரிகள்.
தமிழ்ச் சினிமா வளர்வதற்குச் சந்தர்ப்பம் இல்லையா? எனும் கேள்வியினை **சித்திரலேகா மௌனகுரு** கேட்டார். தொழினுட்பரீதியாக முன்முயற்சி இருந்தும், சினிமா பழைய தடத்திலேயே செல்வதற்கான காரணம் என்ன என வினவுகின்ற போது, தமிழ் நாட்டில் படிப்பறிவற்றவர்கள் அதிகம் உள்ளது மாத்திரம் தான் காரணம் அல்லவென்றும், தமிழ்நாட்டில் அரசியலும், சினிமாவும் பிணைந்து இருப்பதனால், அரசில்வாதிகள் நல்ல சினிமாக்கள் உருவாவதைத் தடுக்கிறார்கள் எனவும் கலந்துரையாடப்பட்டது உதாரணமாக, **பாரதிராஜா, மகேந்திரன், பாலுமகேந்திரா, ருத்ரையா** போன்றவர்களால் எழுபதிகளின் பிற்பகுதியிலும், எண்பதுகளின் முற்பகுதியிலும் நல்ல சினிமாக்கள் உருவாகி வருகின்ற போது **ஏ.வி.எம், பாலாஜி** போன்ற பெரிய தயாரிப்பு நிறுவனங்களால், **முரட்டுக் காளை, சகலகலாவல்லவன்** போன்ற மிக மோசமான திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டன.
கொஞ்சமாவது பிரயோசனமாக இருந்தது இக்கலந்துரையாடல்
இக் கலந்துரையாடலுக்கு மிகச் சிலரே வந்திருந்தனர். இத்தகைய செயற்பாடுகள் குறுகிய வட்டத்தினுள் தான் நிகழும் போல.
இவ்வாறான கலந்துரையாடலை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியம். பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு தளங்களிலும் இக்கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்படுதல் அவசியம். **விபவி** சார்பாக இக்கலந்துரையாடலை ஒழுங்குபடுத்திய **போல்** பாராட்டிற்குரியவர்.


சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# ஜனாதிபதிகளின் திடீர் சுகயீனங்களின் பின்னணி என்ன?

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இது.
இப்போது எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது.
அப்போதெல்லாம் இறத்மலானை இரயில்வே தொழிற்சாலைக்கு முன்பாக காலை ஆறரைக்கெல்லாம் நாம் அழகான காட்சி ஒன்றைக் காணக் கூடியதாக இருந்தது. வாசலை நோக்கிச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் வைத்திய சான்றிதழ்களுடன் சிலர் உட்கார்ந்திருப்பார்கள். அச்சடிக்கப்பட்ட படிவத்தில் 'சீல்' குத்தப்பட்டிருக்கும். ஒரு வைத்தியர் கைச்சாத்திட்டிருப்பார்; அல்லது வைத்தியரின் கையொப்பம் போடுமிடத்தில் யாராவது ஒருவர் ஏற்கனவே கையொப்பமிட்டிருப்பார். நீங்கள் அவர்களிடம் போகவேண்டியதில்லை. கொஞ்சம் தயங்கி நடந்தாலே போதும். நடைபாதை வியாபாரிகள் போல உங்கள் கையைப் பற்றி இழுக்காத குறையாக அவர்கள் கூப்பிடுவார்கள். வைத்திய சான்றிதழ்கள் தேவையா என்பது அவர்களது கேள்வியாக இருக்கும்.



நீங்கள் அருகில் சென்றால் அவர்கள் உங்கள் பெயர், உங்களுக்கு லீவு தேவைப்படும் நாட்கள் என்பவற்றை விறுவிறென்று எழுதித் தருவார்கள். உங்களுக்கு வைத்திய சான்றிதழ் கிடைத்துவிடும். உங்களுக்கு விடுமுறை தேவைப்படும் நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து உங்களுக்கு என்ன நோய் இருந்தது என்றும் உங்களது கட்டணம் எவ்வளவு என்றும் அறிவிப்பார்கள்.
றயில்வே தொழிலகத்தின் வரட்டுத்தனமான சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் அதன் வாசலிலேயே தினம் தினம் அரங்கேற்றப்படும் விமர்சனமாக இதை நான் கருதினேன்.
இப்போது அரசியல்வாதிகளுக்கும் தமது நடவடிக்கைகளுக்கு காரணம் சொல்ல 'இப்படிப்பட்ட' வைத்திய சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன. ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதிச்சடங்கின் போது அதில் கலந்து கொள்ள முடியாமல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆருக்கு திடீரென்று சுகயீனம் வந்தது. அவரது மரணச் செய்தி கிடைத்த போது ஜே.ஆர் வெளியிட்டிருந்த அறிக்கையை, இறுதிச் சடங்கின் போது ஜே.ஆரால் அனுப்பப்பட்ட பிரத்தியேக செய்தியென்று கூறி வாசித்தார்கள். (அது பிரத்தியேக செய்தி அல்ல, ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியான செய்தியே என்பதையிட்டு யாரும் அலட்டிக் கொள்ளவில்லை) மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் செயலக நிகழ்ச்சிக்கு கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்ட புதிய ஜனாதிபதிக்கும் திடீரென சுகயீனம் ஏற்பட்டுவிட்டது! பாதுகாப்பு காரணங்களுக்காக கலந்து கொள்ள மாட்டார் என்று, ஜனாதிபதி நடமாடும் செயலகத்தின் தொடக்க நாளுக்கு இரண்டு நாட்கள் முன்பாக அறிவிக்கப்பட்ட போதும், பிறகு திடீரென்று அங்கு போகாததற்கு காரணம் சுகயீனமே என்று தெரிவிக்கப்பட்டது.
பாதுகாப்பு அமைச்சராகவும், ஜனாதிபதியாகவும் இருக்கும் ஒருவருக்கு போக முடியாமல் இருப்பதற்கு பாதுகாப்பு நிலையே காரணம் என்று சொல்வது 'வெட்கரமானது' என்பதால் அரசு இப்படித் தெரிவித்திருக்கக் கூடும் என்று பொதுவாக நம்பப்பட்டது. பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால், இன்றைக்கு திரை மறைவில் இருந்து யூ.என்.பி அரசின் நடவடிக்கைகளுக்கு ஆலோசனை' வழங்கும் ஜே.ஆருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதாலேயே அவர் அன்று கலந்து கொள்ளவில்லை என்றும் பேசப்பட்டது.
ஆனால் உண்மையில் இந்த இரண்டு 'வைத்தியச்' சாட்டுகளினதும் பின்னணி இவற்றை விடவும் முக்கியமானது. பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் அவரது துணைவியார் ஆற்றிய 'அரசியல் நன்றியுரை' யிலும் சரி, ரட்ணசிறி ராஜபக்சவின் உரையிலும் சரி தொக்கி நின்ற அரசியல் உள்நோக்கமிக்க கோரிக்கைகளுக்கு, பிற்காலத்தில் ஆட்சிக்குள் அதிகாரத்தைக்கைப்பற்றி ஸ்திரம் செய்து கொள்ளக் காத்திருந்த யூ.என்.பியின் 'மேட்டுக்குடி' அணியின் முக்கிய தலைவரான ஜே.ஆர் முகம் கொடுக்கத் தேவையில்லை என்று கருதப்பட்டதே உண்மையான காரணமாகும்.
அதை விடவும் முக்கியமானது, ஜனாதிபதி டி.பி.விஜேயதுங்காவின் சுகயீனம். கிழக்கு மாகாணத்தில் நிலமை வழமைக்கு திரும்பி விட்டது; அங்கு வாக்கெடுப்பு நடாத்தப்பட முடியும் என்று - அங்கு யுத்த ஒழுங்குகளை மேற்கொண்டுவரும் இராணுவத் தளபதிகளின் அபிப்பிராயங்களையும் புறக்கணித்து விட்டு - அபிப்பிராயம் தெரிவித்துக் கொண்டிருக்கும் அரசினதும் அரசு சார்பு அரசியல்வாதிகளினதும் கூற்றுப் பொய்யாகிப் போகும் என்பதாலேயே அவருக்கு இத் திடீர் சுகயீனம் ஏற்பட்டது.
தாம் கூறுகின்றவற்றில் தாமே நம்பிக்கை வைக்காத இவர்கள், ஜனாதிபதி பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கலந்து கொள்ளவில்லை என்று கூறினால் அது வடக்கு கிழக்கைப் பிரிக்கும் நோக்குடன் நடாத்தப்படவுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடாத்த மட்டும் எப்படி பாதுகாப்பு நிலமைகள் சீராக உள்ளதாக கூறமுடியும் என்ற கேள்வி எழும்பக் கூடும் என்று கருதியே இந்த நாடகத்தை ஆடினர். இலங்கையில் எல்லாவிதமான பாதுகாப்பு வசதிகளும் கொண்ட ஒரு தனிமனிதருக்கு பாதுகாப்பு இல்லாத போது ஒரு பிரதேச மக்கள் முழுவருக்கும் பாதுகாப்பு உண்டு என்று கூறுவது கேலிக்குரியதாகும்.
வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடாத்தியே தீருவது என்பது இப்போது அரசின் உறுதியான முடிந்த முடிவாகி விட்டதாக தெரியவருகிறது. கிழக்கில் நடாத்தப்படவுள்ள வாக்கெடுப்பினை அனைத்து தமிழ்க் கட்சிகளும் எதிர்ப்பதால் முடிந்தளவுக்கு தமிழ்க் கட்சிகளை துண்டாடுவது, புதிய தமிழ்க் கட்சிகளை உருவாக்குவது, முஸ்லீம் கட்சிகளை தமக்குச் சாதகமாகத் திரட்டுவது என்று திரைமறைவில் அரசு தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. மேலும் அப்படி வாக்கெடுப்பு நடக்குமானால், அரசின் கட்டுப்பாட்டுக்குள் இன்னமும் முழுமையாக வராத கிழக்கின் பகுதிகளில் தமிழ் மக்களில் பெரும் பகுதியினர் வாக்களிப்பது சாத்தியமில்லை என்பதும், 'புலிகள் இவ் வாக்கெடுப்பில் முஸ்லீம்கள் கலந்து கொண்டால் என்றென்றைக்குமாக அவர்களைக் கொன்று குவிப்பார்கள்'' என்ற அச்சத்தை வெளியிட்டு வரும் முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் தற்போது அதிலிருந்து பிரிந்த முஸ்லீம் கட்சி என்பவற்றின் 'செல்வாக்கின்' காரணமாக முஸ்லீம் மக்களை குறைந்த பட்சம் வாக்களிப்பிலிருந்து விலக்கி வைக்க முடியும் என்பதும், சிங்கள மக்கள் மட்டுமே பெரும்பான்மையாக வாக்களிக்கும் வாய்ப்பு மட்டுமே இப்போது உள்ளது என்பதும் அரசுக்கு அதன் நோக்கத்தை நிறைவேற்ற சாதகமாகவுள்ள காரணிகளாகும்.



போதாததற்கு காலம் காலமாக 'கள்ளவோட்டு' போடுவதில் திறமைசாலிகளான யூ.என்.பியினருக்கு (அண்மையில் இதுபற்றி விக்டர் ஐவன், தனக்கு யூ.என்.பி.பிரமுகர் ஒருவர் கூறியதாக கூறியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்) வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கு ஆதரவான ஒரு முடிவை வாக்கெடுப்பு மூலம் பெறுவது ஒன்றும் சங்கடமானதல்ல.
வெலிஓயாவில் அண்மையில் நடந்து முடிந்த இராணுவ முகாம் மீதான தாக்குதலின் பின் உடனடியாக அங்கு மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகள் தொடக்கிவிடப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்காக திட்டமிட்டு நடாத்தப்பட்டு வந்த - வருகின்ற குடியேற்றங்களை தொடர்ந்து செய்வதில் அரசு மிகவும் அக்கறையாக இருக்கிறது. பூகோளரீதியில் வடக்கு கிழக்கைத் துண்டாடுவது, அரசியல் ரீதியாக கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் மூலம் அதை மக்கள் ஏற்றுக் கொள்வதாக காட்டிக் கொள்வது என்பன இப்போது அரசின் மிகவும் முக்கியமான அக்கறைக்குரிய விடயங்களாகி விட்டன.
இனி, அரசியல்வாதிகளுக்கும் அரசுத் தலைவருக்கும் அடிக்கடி சுகயீனங்கள் வரக்கூடும். ஆனால் எந்தச் சுகயீனங்களும் இந்த முடிவுகளை நிறுத்தி வைப்பதற்காக வரப் போவதில்லை என்பது மட்டும் உறுதி. வடக்கு கிழக்கில் வாக்கெடுப்பை நடாத்தும் நிலை இல்லை என்று விசயம் தெரியாமல் சொல்லப் போகின்ற இராணுவத் தளபதிகளுக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டு ஓய்வெடுக்க வேண்டி ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

---

# மலையக மக்களும் ஜனநாயக மரபுகளும்

சுதந்திர இலங்கையின் மலையக மக்களின் அரசியல் வரலாற்றை உற்று நோக்கும் போது அது முழுமையாக இந்நாட்டின் வர்க்க அடக்கு முறைக்கும், பேரினவாத அடக்கு முறையின் விளைவான இன ஒதுக்கலுக்கும், இன ஒடுக்கு முறைக்கும் உட்பட்டதாகவே அமைந்திருக்கின்றமையை காணக்கூடியதாக இருக்கின்றது.
பல தசாப்தங்களாக நிலவிவரும் இப் பேரினவாத நெருக்கடிகளின் ஆரம்ப கட்டமாக 1948ஆம் ஆண்டின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமையையும் அதைத் தொடர்ந்து வாக்குரிமை பறிக்கப்பட்டமையையும் குறிப்பிடலாம்.
மாறிமாறி வந்த அரசாங்கங்களினால் இனவாத ரீதியில் பழிவாங்கப்பட்ட இம் மக்கள் 1970க்குப் பிந்திய காலகட்டத்தில் மிகவும் கொடூரமான நீதிகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.
1970 தொடக்கம் 77ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால கட்டத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சி நடைமுறைப்படுத்திய தொண்டமான் விரோத அரசியல் நடவடிக்கைகளினால் இம் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். கட்டுப்பாடான பொருளாதாரக் கொள்கைகளின் அமுலாக்கல் எனும் போர்வையில் உணவுப் பற்றாக்குறை உட்பட, விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளானது இந்த உழைக்கும் மக்களின் பொருளாதாரச் சீரழிவிற்கு வழிவகுத்ததோடு என்றும் மறக்க முடியாத துக்ககரமான அனுபவங்களையும் ஏற்படுத்தியது.
இந்த அநீதியான நிலைமைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய ஐ.தே.கட்சியும், இ.தொ.காங்கிரசும் இப்பிரச்சினைகளை அரசியல் மேடையேற்றி அம் மக்களைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடித்து 1977ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஆதவைத் தேடிக் கொண்டனர். அன்று முதல் இன்று வரை நடைபெற்ற எல்லாத் தேர்தல்களிலும் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றமைக்கான பிரதான காரணம் மலையக மக்கள் அளித்த வாக்குகள்தான் என்றால் தவறாகாது.
இந்தளவுக்கு ஐ.தே.கட்சி அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவுகளை வழங்கியதன் மூலம் மலையக மக்கள் பெற்றுக் கொண்டதென்ன? மலையக மக்களின் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக உரிமையான சமத்துவத்தையும் அங்கீகரித்துப் பேரினவாத கெடுபிடிகளில் இருந்து இம் மக்களைப் பாதுகாக்க ஏதாவது நடவடிக்கைகளை ஐ.தே. கட்சி மேற்கொண்டுள்ளதா என்றால் எதுவுமேயில்லை என்பதுதான் பதில். மாறாக தமிழின ஒழிப்புப் போரை நடத்துவதன் மூலம் பேரினவாத ஆதிக்கத்துக்கு ஏற்படும் சவால்களை முறியடிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதற்குத் தேவையான ஆதரவைச் சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக முழு இலங்கையையும் பேரினவாத மயப்படுத்தியதோடு, மிகக் கீழ்த்தரமான தமிழர் விரோத உணர்வுகளை ஏற்படுத்துவதிலும் முன்னின்று செயற்பட்டுள்ளது. தமிழர்களைப் பழிவாங்கும் ஐ.தே.கட்சியின் பேரினவாதப் போக்கானது தமிழர்களின் பொருளாதாரத்தை சீர்குலைக்கவும், தமிழர்களுக்கு பயத்தை ஏற்படுத்துவதற்காகவும் 1981, 1983 போன்ற தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரங்களை முன்னின்று நடாத்தியுள்ளது. இவற்றின் மூலம் பெரும் பாதிப்புக்குள்ளானவர்கள் மலையகத் தமிழ் மக்கள் தான்.
தொழிலாளர்களின் சந்தாப் பணத்தின் மீது மோகம் கொண்ட தொழிற்சங்க வியாபாரிகளினதும், அத் தொழிற்சங்க வியாபாரிகளினாலேயே வழி நடத்தப்படும் அரசியல் அமைப்புக்களினதும் ஆதிக்கங்களுக்கு உட்பட்டே இம் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவது ஒரு துரதிஷ்டமான நிலைமையே ஆகும். மலையக மக்களின் மீதான அக்கறைக்குப் பதிலாக அவர்கள் வாரி வழங்குகின்ற சந்தாப் பணத்தின் மீதும், அரசியல் ஆதரவுகள் மீதும் அக்கறை கொண்ட இத் தலைமைகள் ஒட்டு மொத்தமாக, இம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் மலையக மக்கள் ஈடுபடுவதைக் கூட தவிர்த்தே வந்துள்ளனர்.
1978ம் ஆண்டிலிருந்து கடந்த 15 வருடங்களாக ஐ.தே.கட்சியுடன் இணைந்து இ.தொ.காங்கிரஸ் செயற்பட்டு வந்துள்ளது. மலையக மக்களின் ஆதரவை ஐ.தே.கட்சிக்குப் பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்கை இ.தொ.கா வகித்துள்ளது. இப்படியாக இந்த ஐ.தே.கட்சியின் பேரினவாத ஆட்சியை பாதுகாப்பதற்குச் சன்மானமாக சில அமைச்சர் பதவிகள் உட்பட சலுகைகள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டது. ஆனால் இப் பதவிகளின் மூலம் இந் நாட்டின் பேரினவாதக் கெடுபிடிகளின் மூலம் மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவற்றையும் எள்ளளவும் தீர்த்து வைக்க இவர்களால் முடியவில்லை. கடந்த 15வருடங்களுக்கு மேலான ஐ.தே.கட்சியுடனான உறவு ஐ.தே.கட்சிக்கு முண்டுகொடுக்க மட்டுமே உதவியது. பிரஜாவுரிமைக்காக இவர்கள் ஆடிய பித்தலாட்டம் ஒன்றைத் தவிர வேறு எதனையுமே இவர்களினால் செய்து கொள்ள முடியவில்லை.
இதன் தலைமைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பதவிகள் மூலம் வாய்ப்பூட்டைப் போட்டுவிட்டு ''ஆமாம் சாமி'' போடவைத்ததன் மூலம் சந்தர்ப்பவாத அரசியல் வியாபாரத்தில் இ.தொ.கா தலைமைகளை விட ''சாணக்கியர்கள்'' தாங்களே என்பதை ஐ.தே.கட்சியின் பேரினவாதத் தலைமைகள் நிரூபித்துவிட்டன.
இவர்களின் திருவிளையாடல்களின் மூலம் ஒரு இனத்தின் எதிர்காலம் படுகுழியில் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த மக்கள் இந்நிலைமையைப் புரிந்து கொள்ளக் கூடாது என்பதில் இந்த ஜனநாயகத் தலைமைகள் மிகவும் அவதானமாகவே உள்ளன.
அடிப்படை உரிமைகளுக்கும், ஜனநாயக மரபுகளுக்குமான இவர்களின் கடமைப்பாடு எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பதற்கு சமகாலத்தில் கிடைத்த ஒரு சிறந்த உதாரணமாக நடைபெற்று முடிந்த தமிழ்த் தின விழாவில் சமூக நாடகத்தில் முதலாம் இடம் பெற்ற பொகவந்தலாவை சாந்த மரியாள் தமிழ் வித்தியாலயத்திற்கான பதக்கத்தை பலாத்காரமாகக் கொடுக்கவிடாது தடுத்து நிறுத்திய சம்பவத்தைக் குறிப்பிடலாம்.
தனது அமைப்பினுள் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காத இவர்கள் ஒரு இனத்தின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க நேர்மையாக செயற்படுவார்கள் என்பதை எதிர்பார்ப்பது எப்படி?

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் உ.சேரன்

# இன்று போர்; நாளை சமாதானம்!

நோபல் பரிசு பெற்ற நால்வர் இலங்கையில் சமாதானத்திற்கென ஒரு ஐந்தம்சத் திட்டத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர். நெதர்லாந்தைச் சேர்ந்த யான் ரின் பேர்கன், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ் வால்ட், ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த மோரீட் மாகிர் மற்றும் பெல்ஜியத்தைச் சேர்ந்த இல்யா பிறிஹோஹீன் என்பவர்களே இந்த உலகப்புகழ் பெற்ற நால்வர். இவர்களுள் நெதர்லாந்தின் யான் ரின் பேர்கன் நீண்ட காலமாகவே இலங்கைப் பிரச்சினையில் அக்கறை கொண்டிருந்தவர். பௌதிகவியலே அவருடைய துறை என்றாலும் பொருளியலுக்காக நோபல் பரிசு பெற்றவர். பலதுறைகளிலும் விற்பன்னர்.

ஐ.நாடுகள் சபையின் தலையீட்டுடன் ஒரு சமாதானத் தீர்வை இவர்கள் விடுதலைப் புலிகளிடமும் அரசாங்கத்திடமும் முன் வைத்துள்ளனர். சம்பந்தப்பட்ட இரண்டு அரசாங்கங்கள் அல்லது போரில் ஈடுபட்டிருக்கும் இரண்டு பிரிவினரும் வேண்டிக் கொண்டாலன்றிப் பிரச்சினையில் ஐ.நா சபை தலையிடுவது பாரம்பரியமன்று.

எனினும் சர்வதேச அரசியல் சூழலில் ஏற்பட்டுள்ள தீர்மானகரமான பல மாற்றங்களுக்குப் பிறகு, இன்று, என்றுமில்லாதவாறு ஐ.நா.சபை உலகின் பல பாகங்களில் நீண்ட கால முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பலவகையான தலையீடுகள் மூலம் முயன்று வருகிறது. கம்போடியா, எல்சல்வடோர், சோமாலியா பொஸ்னியா என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

மனிதாபமான ரீதியான தலையீடு(Humanitaran Intervention) என்பதே அடுத்த நூற்றாண்டின் சர்வதேச அரசியல் சித்தாந்தத்தை வழிநடாத்தப் போகும் மூலக்கருத்து என்று இப்போது தெளிவாகி விட்டது.
அண்மையில் வியன்னாவில் நடைபெற்று முடிந்த உலக மனித உரிமைகள் மாநாட்டிலும் இந்த அம்சமே முதன்மையாகப் பேசப்பட்டது.

ஐ.நா தலையீடு என்பது இன்றைக்கு அமெரிக்காவின் தலையீடு என்று வந்து விட்டாலும் முன்னரைப் போலன்றி அமெரிக்கா தனித்துத் தலையிடாமல் ''சாத்திரப்படிக்கு'' நாலைந்து நாடுகளையும் சேர்த்துக் கொண்டு நுழைவது இனிமேல் நடக்கப் போகிற விஷயமாகும். இந்த வகையில் நாடுகளின் இறைமை, சுதந்திரம் என்பனவற்றுக்கு ஒரு வகையான எல்லைப்பாடு இருக்கிறது. உள்நாட்டுப் பிரச்சினைகளை நாங்களாகவே புரிந்துணர்வுடன் தீர்த்துக் கொள்ள இயலாத அளவுக்கு அரசியல் விவேகமும், இன சமத்துவ உணர்வும், அரசியல், குடியியல் உரிமைகள் மீதான கௌரவமும் அற்ற இலங்கை அரசியலும் தவிர்க்க முடியாமல் சர்வதேச உதவியை நாடவேண்டி இருப்பது வரலாற்றின் கோலம்.

சென்ற மாதம் நியூயோர்க்கில் உள்ள ஐ.நாடுகள் சபையின் முன் விடுதலைப் புலிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். ஜூலை 83 இனப் படுகொலையை நினைவுறுத்தி இலங்கையில் தமிழ் மக்களைப் பாதுகாக்கும்படியும் ஐ.நாவின் தலையீட்டைக் கோரியும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது.

ஐ.நா சபையூடாக அனைத்துலகத் தலையீட்டை இலங்கையும் விடுதலைப் புலிகளும் விரும்புகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் இந்திய அரசு இத்தகையதொரு முயற்சியை விரும்பாது என்பது ஏற்கனவே தெரிந்த விஷயம். தென்னாசியாவின் சட்டாம்பிள்ளையான இந்தியாவை மீறி ஐ.நா.சபை இலங்கை இனப்பிரச்சினைக்குள் வருவதை தன்னுடைய முகத்தில் ஒரு செருப்படி என்றுதான் இந்தியா கருதும்.

மறுபுறத்தில் ஐ.நா. தலையீடு என்பது இரு பகுதியினரையும் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பேணும்படி நிபந்தனைப்படுத்தும் என்பதால் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் ஐ.நா. வின் தலையீட்டை இதயபூர்வமாகவே விரும்புவர்களா என்பதும் ஒரு கேள்விக்குத்தான்.

நோபல் பரிசு பெற்ற அறிஞர்கள் சமர்ப்பித்துள்ள திட்டத்தில் முஸ்லீம் மக்களின் பிரச்சினையும் உரிய முறையில் இனங்காணப்பட்டுள்ளமை இன்றைய இனப்பிரச்சினையின் முக்கியமான அரங்காடிகள் தமிழர்களும் சிங்களவர்களும் மட்டுமல்ல முஸ்லீம்களும் தான் என்பதை எல்லோரும் உணர்ந்து வருவதை உறுதிப்படுத்துகிறது.
வெறுங் காற்றில் சமாதானம் பெயராது:

நீதியையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வு - உடன்பாட்டிலேயே சமாதானம் மலர்வது சாத்தியம். இத்தகைய உடன்பாடு ஏற்படாதவரை ''இன்று போர்; நாளை சமாதானம்'' என்ற சுவரொட்டி தான் நிரந்தரமாக இலங்கையில் ஒட்டப்படும்!

278 குடும்பங்களைக் கொண்டது இந்த நீட்வூட் தோட்டம். ஏறத்தாழ 1500 பேர் மொத்தமாக உள்ளனர். ஒரு வீட்டிற்கு ஒருவர் என்பதற்கும் குறைவாக 156 பேரே இத் தோட்டத்தில் வேலை செய்கின்றனர். 350 மாணவர்கள். 610 கைக்குழந்தைகள், 20 கர்ப்பிணிகள் இருக்கிறார்கள். தோட்டத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் தான் ஒரு சிறிய ஆஸ்பத்திரி...

''என்னங்க,நீங்க இவ்வளவு தூரம் இருந்து எங்களைச் சந்திக்க வந்திருக்கிறீங்க .பொலிஸ் முறைப்பாடு செய்யிறதைவிட, வந்த விசயம் முக்கயம்க''.
''நீங்க''
''நான் தாங்க, இந்தத் தோட்டத்தின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருங்க. எம்பேரு முருகேசு. இவரு ஐ.தே.கட்சியின் தொழிற்சங்கத்தின் தலைவரு வி.கணேசன்''
நீட்வூட் தோட்டத்தில் 120 நாட்களுக்கு மேலாக நடந்து வரும் வேலை நிறுத்தம் தொடர்பான மேலதிக தகவலைப் பெறுவதற்காக, சென்றிருந்த போது, வழியில் எதிர்ப்பட்டவர்கள் இவர்கள். இவர்களிடம் எம்மை அறிமுகம் செய்தார், எமக்கு உதவியாக வந்தவர். பொலிஸ் புகார் செய்யப் போனவர்களை இடைவழியில் சந்தித்து விடுகிறோம்.
ஊவா மாகாணத்தின், தென்பகுதி எல்லையில் உள்ளது நீட்வூட் தோட்டம். வெளிநாட்டு நிறுவனமான, கிப்சன், கொம்பனியின் நிர்வாகத்தின் கீழ், 150 வருடங்கள் இருந்த பிற்பாடு 1968ஆம் ஆண்டு, தேசிய முதலாளிகளான ஈ.பி.ரி.சுசா, ஜே.பி சுசா என்ற இருவருக்கும் விற்கப்பட்டது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் (1970-1975) 50 ஏக்கருக்கு மேல் ஒருவர் வைத்திருக்க முடியாது, என்ற நிலச்சீர்திருத்தச் சட்டம் நடைமுறையிலிருந்தமையால், 360 ஏக்கர்களை அரசாங்கம் பொறுப்பேற்று, அரச பெருந்தோட்டயாக்கம் என்ற பெயரில் நிர்வகித்தது. மிகுதி 350 ஏக்கர்களை ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற அடிப்படையில், திரு,சுசா,திருமதி சுசா, தியாகராஜா,முகமட், கலில்,சண்முகம்,ரதநாயக்க ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இப்போது தனியார் மயப்படுத்தலின் பிற்பாடு, மீண்டும், அரசாங்கம், தனது நிர்வாகத்தின் கீழ் இருந்த தோட்டங்களை, தனியாருக்கு விற்றுள்ளது.
''தோட்ட நிர்வாகியான, சுசாவும், டிமேக்கரும் தோட்டத்தில் குழப்பத்தை விளைவித்து, எமது போராட்டத்தையும் சீர்குலைத்து, எங்கள் இருவரையும் கைது செய்யும் திட்டம் உள்ளது. அதனால், பிரச்சினைகள் ஏற்படும் முன் பொலிஸ் முறைப்பாடு செய்தால் நல்லது. அதுதான் இப்பொழுது நாங்கள் பொலீஸ் நிலையத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.
நான்கு பிள்ளைகளின் தந்தையான, இத் தோட்டத் தொழிலாளர்களின் தலைவரான எஸ். முருகேசு (38) தொடர்ந்து கூறினார்.

''1988ஆம் ஆண்டு, அரச பெருந்தோட்ட இயக்கத்தில் இருந்து, சுசா என்ற முதலாளிக்கு, 30 வருட குத்தகைக்கு இராஜாங்கஅமைச்சர் செல்லச்சாமி இத் தோட்டத்தை எடுத்துக் கொடுத்தார்''.
''அரசாங்கத்தில் இருந்து கிடைக்கும் சலுகைகளுடன் மேலதிக சலுகைகள் செய்து தரப்படும்'' என தோட்டக்கமிட்டிக்கு உறுதி அளிக்கப்பட்டது.இந்த உறுதி மொழியை, செல்லச்சாமி முன்னிலையில், சுசா கூறினார்.
''5 வருடங்கள் அரசாங்கம் கொடுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டது. 1993 ஆண்டு அரச பெருந்தோட்டயாக்கத்தின் கீழ் உள்ள தோட்டங்களில் ரூபா72/24 சதமாக சம்பளம் அதிகரித்துக் கொடுக்கப்பட்டது. ஆனால் எமக்கு பழைய சம்பளமாக 60/54 சதத்தையே தந்தார்கள். உடன்படிக்கையின்படி, எமது சம்பளத்தையும் அதிகரித்து தருமாறு கேட்டோம். ஆனால் நிர்வாகம் தர மறுத்துவிட்டது. மறுக்கின்றது.
ஆதலால் நான்கு மாதங்கள் சம்ப



முருகேசு
இ.தொ.கா.பிரதிநிதி

ளம் பெறாமல், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியவாறு வேலை செய்தோம். இத் தோட்டத்தில் மூன்று தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் சங்கம் (ஐ.தே,க.), செங்கொடிச் சங்கம். இந்தத் தொழிற் சங்கங்கள், நான்கு மாதமும் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. அதனால், மூன்று தொழிற்சங்கங்களையும், சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் கூட்டாக ஏப்பிரல் 19 ம் திகதி முதல், வேலை நிறுத்தத்தில் இறங்கினோம்.
பிரதேச சபைக்குத் தெரிவான, தொழிற்சங்க பிரதிநிதிகளால், இந்தப்பிரச்சினை தொடர்பாக மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இதற்கு நிர்வாகம் சமூகமளிக்கவில்லை. அதனால் தீர்வும் கிடைக்கவில்லை. இதனால் கொழும்பில் உள்ள, எமது தொழிற்சங்கங்களின் மத்திய கமிட்டிகளுக்கு அறிவித்தோம்.
இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி, இது தொடர்பாக, பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்தார். இவற்றுக்கும் நாம், எமது சொந்தச் செலவில் 15 தடவைகளுக்கு மேல் சென்றிருக்கிறோம். ஆனால் எந்த முடிவும் கிடைக்கவில்லை.
அதனால், எமது தலைவர் தொண்டமானுக்கு முறைப்பாடு செய்தோம். ''உங்களை யார் வேலை நிறுத்தம் செய்யச் சொன்னது. போய், செல்லச்சாமியை சந்தியுங்கள்'' என்றார், அவர்.
ஜூன் 17ம் திகதி செல்லச் சாமி பேச்சுவார்த்தை ஒன்றை ஒழுங்கு செய்தார். இதற்கு தோட்ட நிர்வாகி சுசாவும் சமூகமளித்திருந்தார்.
செல்லச்சாமி அவரிடம்(சுசா) கூறினார், ''ஒப்பந்தப்படி நீங்களும் ரூபா72/24சதத்தை கொடுங்களேன்'' என்று. அதற்கு 'நான் புதிய வேலைத் திட்டங்கள் பலவற்றை தோட்டத்தில் செய்துள்ளேன். (என்ன செய்தாரோ, தெரியாது என தொழிலாளர்கள் முணுமுணுத்துக் கொண்டனர்). அதில் நட்டமடைந்துள்ளேன். அதனால் சம்பளம் கூட்டி கொடுக்க முடியாது'' என்றார் சுசா.
''அப்படியானால், தோட்டத்தை அரசாங்கத்திடம் மீள ஒப்படையுங்கள்'' என்று நாம் கோரிக்கை விடுத்தோம். அதற்கும் 'முடியாது' என்றார்.
இதன் பின் ஜூன் 24ம் திகதி, எம்மை செல்லச்சாமி கூப்பிட்டு அனுப்பியிருந்தார்.''பத்து நாட்களுக்கு மட்டும் வேலைக்குச் செல்லுங்கள், அந்த பத்து நாட்களுக்குள், தோட்டத்திற்கு வந்து தோட்டக் கமிட்டி , நிர்வாகம், பொது மக்கள், எல்லோரையும் அழைத்து இதற்கு முடிவு காண்பேன்'' என்றார்.
''இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் வரை வேலைக்குப் போக முடியாது'' என நாங்கள் கூறினோம். அவரது குறிக்கோள், எப்படியாவது எம்மை வேலைக்குத் திருப்பி அனுப்பவதாகவே இருந்தது.
இது தொடர்பாக நாம் தோட்டத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்திச் செல்லச்சாமி கூறியதைக் கூறினோம். பொதுமக்கள் எம்மை பேசி, அடிக்குமளவுக்கு வந்தார்கள்.
செல்லச்சாமியையே நேரடியாக வந்து பொதுமக்களிடம் கூறும்படி கேட்டுக் கொண்டோம். ஆனால் இதுவரை அவரும் வரவுமில்லை, பதிலேதும் தரவுமில்லை.
எமது தோட்டத்தில் அனேகமாக எல்லோரும் இ.தொ.க.,ஐ.தே.க. கூட்டுக்கே வாக்களித்தவர்கள். தேர்தல் காலங்களில் எம்மைத் தேடி வந்தவர்கள் அது செய்து தருகிறோம் இது செய்து வருகிறோம்

## ''செல்லச்சாமி இல்ல ... அ

என்று உறுதி மொழிகள் ஏராளம் தந்தார்கள் ஆனால் இன்று வரை ஒருவர் கூட இப்பக்கம் வரவில்லை. நாமோ, மலசல, கழிவு கூடங்கள் இல்லாமல், தண்ணீர் இல்லாமல், ஒழுங்கான பாடசாலைக் கட்டிடம் இல்லாமல் வாழ்கின்றோம்.
மண்ணெண்ணெய் வாங்க பணம், பால்மா,மா, எல்லாமே காசுக்குத் தான் வாங்க வேண்டும். ஆனால் அதன் விலைகளோ அதிகரித்துக் கொண்டே போகின்றன.

ஐ.தே.கட்சியின் ...
தின் தலைவர் வி. ...
சொல்கிறார்.



வி.கணே...
ஐ.தே.க. ...

''இந்த நிர்வாகம் ...
தில் இருந்து பல பி...
எதிர்நோக்குகின்றே...
பெண்களுக்கு குழ...
தன. இதற்கு, தோ...
பிரசவ பணம் செ...
டும். ஆனால் இது...
வில்லை. ப...
கேட்கும்படி கூறுகி...

தோட்ட நிர்வாகத்...
தேவையான உண...
ளைத் தருவார்கள்...
பணத்தைச் சம்பளத்...
கள். எமக்கு ... தம்...
தேயிலை தருவார்க...
சாங்கம் சம்பளத்த...
பணம் பத்து சத...
ஆனால் இந்த நிர்வ...
கிலோ தேயிலைக்கு...
வெட்டுகின்றது.
நாம் இது பற்றிக் கே...
மூன்று மாதங்களு...
இந்த விலை. பின்பு...
வதாகக் கூறினார்கள்...
வரை குறைக்கவி...
ளவு விலை கூட்...
காரணம், தேயிலை...
டத்திற்கு உரியது ...
வேறு தோட்டங்கள...
தருகிறார்களாம்.
கூடிய விலை கொ...
தால் தான் இவ்வ...
எமக்குத் தருவதாக...
கள். ஆனால் உண்...

னில் இந்தத் தேயிலை...
டத்தினுடையதே.
இவர் குத்தகைக்கு ...
தோட்டத்தில் இது...
வெட்டுதலும், கொ...
தையும் மட்டுமே ...
கின்றார். வேறு எந்...
செய்வதில்லை.
உரம் போடுதல், கா...
தண்ணீர் நிற்பதற்க...
தான் நல்ல கொழுந்...
கலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



தொழிற்சங்கத்
ணேசன் (41)



சன்
திநிதி
மாறுப்பேற்ற
சினைகளை
1988 இல் 7
தகள் பிறந்
நிர்வாகம்
க்க வேண்
ர தொடுக்க
வ திடம்
ர்கள்.

ஆனால், சுசாவினுடைய சொந்தமான தோட்டப் பகுதியில் தேயிலைக்கான எல்லாப் பராமரிப்புகளும் ஒழுங்காகச் செய்கிறார்கள். எங்கள் தோட்டத்தில் பதியப்படாதவர்கள், உறவினரல்லாதவர்கள் போன்றவர்களுக்கு வேலை வழங்கப்படுவதில்லை.

**"எமது போராட்டத்தை லஞ்சம் கொடுத்தாவது குழப்ப தோட்ட நிர்வாகம் முயல்கிறது. டீ மேக்கர் சின்னையா நாகலிங்கம் என்ற தொழிலாளியிடம் 500 ரூபா கொடுத்து வேலைக்கு ஆட்களைக் கூட்டி வரும்படி கூறியுள்ளார். ஆனால், நாகலிங்கமோ இந்தப் பிரச்சினை தீரும் வரை எக் காரணம் கொண்டும் வேலைக்குப் போக மாட்டோம் என்று காசை மூஞ்சியில் விட்டெறிந்துள்ளார்".**

நடாத்திய பின்பு, மீண்டும் 60 ரூபா சம்பளத்திற்கு வேலைக்குப் போவது எப்படி"!

உடன்படிக்கையில் இரு கடிதங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஒன்று தமிழில். மற்றது ஆங்கிலத்தில். ஆங்கிலத்தில் கைச்சாத்திடப்பட்ட கடிதத்தில் உள்ள சம்பளத்தில் எந்த விதமான மாற்றமும் இல்லை என உள்ளது.

தமிழில், "அரச பெருந்தோட்டயாக்கம் சம்பளத்தில் மாற்றம் ஏற்படுத்தும் பொழுது இதிலும் மாற்றம் நடைபெறும்" என உள்ளது.

கடந்த மாதம் நிர்வாகம் பொலிஸில் புகார் செய்தது. வேலைக்குச் செல்பவர்களை நாம் கல்லடித்து நிற்பாட்டுவதாக.

முன்பு வேலை செய்த போது ஒரு நாளைக்கு 60ரூபா50சதம் வீதம் வேலை செய்யும் நாட்களுக்கு ஏற்ப மாதத்திற்கு 1200 ரூபா கிடைக்கும். இதில் ரேசன் சாமான் எனக் கூறி (அரிசி, மாவு, தேயிலை, பால்மா...) 600க்கு கிட்ட வெட்டுவார்கள். மிகுதி 600 ரூபாவைத்தான் சம்பளம் என்ற பெயரில் வாங்குவோம். இங்கு ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஐந்து பிள்ளைகளாவது இருக்கின்றார்கள். அப்படியானால் இந்தச் சம்பளம் எதற்குக் காணும்?


மேலதிக வருமானம் என்று ஒன்றுமில்லை. படுப்பதற்கும், வேலை செய்வதற்கும், பயணம் போவதற்கும் ஒரு சாரத்தையே பாவிக்கின்றேன். அது கூட வியர்த்து மணக்குது.

நாகலிங்கமோ இந்தப் பிரச்சினை தீரும் வரை எக் காரணம் கொண்டும் வேலைக்குப் போக மாட்டோம். இந்தக் காசு எனக்கு வேண்டாம் " என்று மறுத்துள்ளார்.

இளமைக் காலங்களில், தொழிலாளர் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கு பற்றி, இன்று மரக்கறித் தோட்டத்தில் கஷ்டப்பட்டு உழைக்கும் 60 வயதுடைய சுப்பிரமணியம் தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்த போது:"சுதந்திரத்திற்குப் பிறகு கூட, நாட்டு அரசியலிலே தொழிலாளர் வாழ்க்கையிலே ஒற்றுமைப்பட்டுள்ளார்கள். எங்களுக்குள் இந்த ஐக்கியம் தொடர்ந்தும் இருக்கும். இந்த நியாயமான போராட்டம் தொடரும். யாராலும் எம்மைப் பிரிக்க முடியாது.

நாம் தொழிலாளர் வர்க்கம் என்பதை இன்று நீட்வுட் தொழிலாளர்கள் நிரூபித்துள்ளார்கள். நாம் தொழிலாளர்களின் உரிமைகளுக்காப் போராடுகின்றோம். இந்தப் போராட்டத்தில், தொழிற்சங்கங்களுக்கு இடையிலான பிளவுகளால் எமது ஐக்கியத்தைப் பிளவுபடுத்த முடியாது.

வேலைக்குப் போவோம். இல்லாட்டி போகமாட்டோம். அரசாங்கத்தில இருந்து தனியாருக்கு எடுத்தாப் பிறகு கூட, எந்த வசதிகளும் இல்ல. இந்த வட்டாரத்திற்கே, ஒரு பைப் தான் இருக்கு. பாத்றூம் இல்ல. தொழிலாளர்களுக்கு மாட்டுப் பண்ணை வைத்துக் கொடுக்கப் போவதாகக் கூறி நன்கொடைகளையும், கடன்களையும் பெற்று தொற தான் ஒரு மாட்டுப்பண்ணையைச் சொந்தமாக்கிக் கொண்டார். ஆனா, தொழிலாளர்களுக்குத் தான், ஒரு சலுகையும் செய்யவில்லை.



சுப்பிரமணியம்

## "உங்களை யார் வேலைநிறுத்தம் செய்யச் சொன்னது போய் செல்லச்சாமியைச் சந்தியுங்கள்" - தொண்டமான்

# ...தார செய்யிறது பிழை ...போராடுவதே சரி!"

சாப்பாட்டுக்கு யாரும் எந்த உதவியும் செய்வதாக இல்லை. இது போன்ற போராட்டங்கள் நடந்தால் நிவாரண உதவி கொடுப்பார்கள். "எமக்கு எந்த விதமான அறிவித்தலும் கொடுக்காததால் நிவாரணம் தர முடியாது" எனச் செல்லச்சாமி கூறி விட்டார்.

ஒருவர் இறந்தால், 300 ரூபா தரப்படும். அரசாங்கத்திடம் தோட்டங்கள் இருந்த போது, இவர்களோ 250ரூபா மட்டுமே தரலாம் எனக் கூறினார்கள். இப் போராட்டம் ஆரம்பித்த பிறகு அதைக் கூட நிறுத்தி விட்டார்கள்.

இந்தப் போராட்டம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் அறிவித்துள்ளோம். இதுவரை எந்த விதமான முடிவும் வரவில்லை. தொடர்ந்தும் முடிவு வரும்வரை, நாமும் சத்தியாக்கிரகம் இருப்போம். அதற்கும் முடிவு இல்லையெனில் உண்ணாவிரதம் இருப்போம்.




சூசையம்மர்

**சூசையம்மா(63):** என்டை பிள்ளைங்க வேலை செய்யிறாங்க. மகமார் வேலைக்குப் போறதால தான் சாப்பிடுறம். இப்ப வேலை நிறுத்தம் செய்யிறதால வேலையும் இல்லங்க. பெரிய கஸ்டம்க. சாப்பாட்டுக்கு என்ன செய்யிறதெண்டு தெரிய இல்லைங்க. இந்தப் போராட்டம் சரிங்க. இந்தப் பத்துப் பன்னிரண்டு ரூபாவைக் கொடுக்கலாம் தானேங்க. கொடுக்காம இருக்கிறது அவங்கட குற்றம் தானுங்க. மகள்மாருக்கு பிள்ளைகளும் இருக்கிறாங்க. நாங்க ஏழு பேருங்க.

**22 வயதுடைய இளைஞன்:** மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆட்கள் எல்லாம் பெரும் கஷ்டப்படுகிறார்கள். கடன் வாங்கித்தான் குடும்பம் நடத்துகிறார்கள்.

எமக்குத்
பொருட்க
அதற்கான
பிடி...ார்
ரக்...லா
தற்கு அர
வெட்டும்
மட்டுமே.
ா அரைக்
பது ரூபா

பொழுது,
மட்டுமே
றத்து விடு
னால் இது
. இவ்வ
ட்டதற்குக்
து தோட்
லையாம்.
வாங்கியே
ர்களிடம்
வாங்குவ
விலைக்கு
றுகின்றார்
ன்னவெ



முருகையன்

மற்றத் தோட்டங்களில் இருந்து ஆதரவு கிடைக்கும். ஆனால் அதைச் செய்ய வேண்டியவர்கள் மாவட்டக் கமிட்டித் தலைவர்கள். அவர்களைக் கண்டு பிடிப்பதே கஷ்டமான விடயம்.

இங்கு சிங்களக் குடும்பங்கள் இரண்டும், முஸ்லீம் குடும்பங்கள் நான்கும் உள்ளன. அவர்கள் எம்முடன் பூரணமாக ஒத்துழைக்கின்றனர்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் இ.தொ.கா, ஐ.தே.க கூட்டுக்கே வாக்களித்தோம். சச்திதானந்தம், கே.வேலாயுதம், சுப்பையா, லோகநாதன் என நான்கு பேர் தெரிவானார்கள். இவர்கள் வாக்குக் கேட்க மட்டுமே வந்தார்கள். இப்பொழுதெல்லாம் இந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை.

எந்த விதமான மாற்றமோ, நன்மைகளோ நடக்கவுமில்லை. கிடைக்கவுமில்லை. கிடைக்கப் போவதும் இல்லை.

1816ம் ஆண்டுகளில் கட்டிய லயன்களில் தான் இப்பொழுதும் நாம் வாழ்கிறோம். செல்லச்சாமி இல்லை, எந்தச் சாமிகளும் தேர்தல் காலங்களில் மட்டும் தான் வருவார்கள். இவர்களுக்கு இந்த லயன்களைத் திருத்திக் கொடுக்க முடியாதா? முடியாது. செய்யமாட்டார்கள்.

சில தனியார் தோட்டங்களுக்கு மின்சாரம் கூடக் கிடைத்துள்ளது. நாங்கள் நடத்திய பல போராட்டங்களின் பயனாகத்தான் சிலருக்கு மீண்டும் வேலைகள் கிடைத்தன"

நான் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவன். 1968ஆம் ஆண்டில் பொது வேலை நிறுத்தம் ஒன்று நடைபெற்றது. நிர்வாகம் காடையர்களை அனுப்பி எம்மை அடித்துப் பணிய வைத்து வேலைக்கு அனுப்ப முயற்சித்தார்கள். நாங்கள் காடையர்களை அடித்து விரட்டினோம்.

தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் சலுகைகள் செய்வதாகக் கூறினார்கள். சலுகைகள் செய்துதர முடியாதென்றால் தோட்டங்களை கைவிடுவதுதானே.

இ.தொ.கா தலைவர்களில் நம்பிக்கை வைத்துத்தான் மக்கள் அதற்கு வாக்களித்தார்கள். அமைச்சரவையில் கூட தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் தொண்டமான், செல்லச்சாமிபோன்றோர் இருக்கிறார்கள். இவர்கள் என்ன செய்கிறார்கள்? பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுவதுடன் சரி, அவர்களது கடமை முடிந்து விட்டதாக்கும். நாங்கள் நடுத்தெருவில்.

இன்று தொழிலாளர்கள் எந்தத் தொழிற்சங்கப் பாகுபாடும் இன்றி

## ...; எந்தச் சாமிகளுக்கும் ...கறையில்லை"

து தோட்

த எமது
புல்லு
பறிப்ப
த்து வரு
மரிப்பும்
டித்தல்,
ட்டுதல்(
செய்தால்
ப் பறிக்

ஐந்து பிள்ளைகளின் தந்தையும், கூலி வேலை செய்பவருமான முருகையன்(47): "பிள்ளைகள் பாடசாலைக்குப் போகாமல் விட்டதன் காரணம், வேலை வாய்ப்பு இல்லை. சம்பளம் இல்லை. இந்த நிலைமையில் படிப்பதற்குத் தேவையான உபகரணங்களை எப்படி வாங்கிக் கொடுப்பது. அது முடியாத காரியம்.நிர்வாகம் வேலைக்குப் போகச் சொல்கின்றது. மூன்று மாதம் போராட்டம்

நன்மைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாக்களித்தோம். இன்று ஏமாந்து நிற்கின்றோம். அம்மன் கோவிலில் கூட வைத்து சத்தியம் செய்தார்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக. ஆனால் இன்று?....

"எமது போராட்டத்தை லஞ்சம் கொடுத்தாவது குழபப தோட்ட நிர்வாகம் முயல்கிறது. டீ மேக்கர் சின்னையா நாகலிங்கம் என்ற தொழிலாளியிடம் 500 ரூபா கொடுத்து வேலைக்கு ஆட்களைக் கூட்டி வரும்படி கூறியுள்ளனர். ஆனால்,



செல்வராஜா

மூன்று பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய **செல்வராஜா:** எங்களுக்கு 72ரூபா சம்பளம் கொடுத்தா, நாங்க

→ 8

நன்றி - நூலகத்திட்டம்



# தர்மசேன பத்திராஜாவின் படங்கள் ஒரு மீள்பார்வை



சிங்களத்தின் குறிப்பிடத்தக்க நெறியாளர்களுள் ஒருவரான தர்மசேன பத்திராஜாவின் படங்களின் மீள்பார்வை (retrospective) ஒன்று முதன் முறையாக யூலை மாத இறுதியில் நடைபெற்றது.

முன்னைய 'லக்திவ' வாராந்தச் சிங்களப் பத்திரிகைக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் படவிழாவில் பத்திராஜாவின் முக்கியமான ஆறு திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

25 வருடத்திற்கு மேற்பட்ட 'என்னுடைய திரையுலக வாழ்வில் முதன் முறையாக எனது திரைப்படங்கள் மீள்பார்வைக்கு உள்ளாவது மகிழ்ச்சியான விடயம். எனது திரைப்படங்கள் குறித்த சரியான மதிப்பீட்டிற்கு வருவதற்கு இது சரியான தருணம்' என்று குறிப்பிடுகிற பத்திராஜா 'பொன்மணி' என்கிற தமிழ்ப் படம் ஒன்றையும் நெறியாள்கை செய்திருக்கிறார் என்பது அனேகர் அறியாதது.

எழுபதுகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் பத்திராஜா விரிவுரையாளராக கடமையாற்றிய சந்தர்ப்பத்தில் உருவாக்கப்பட்ட படம் இது.

காவலூர் இராசதுரையால் தயாரிக்கப்பட்ட இத் திரைப்படம் 60களிலும், 70களிலும் யாழ்ப்பாணத்தில் முக்கியம் பெற்றிருந்த சாதிப் பிரச்சினையின் ஒரு அம்சத்தைக் கருப்பொருளாகக் கொண்டது. கிருஸ்தவக் கரையார இளைஞன் ஒருவனுக்கும் இந்து வேளாளப் பெண் ஒருத்திக்கும் இடையிலான காதலையும் அதன் விளைவாக எழுகிற சிக்கல்களையும் பின்னிப் படைக்கப்பட்டது.

இந்தியத் தமிழ்ப் படங்களோடு ஒப்பிடுகையில் தொழில்நுட்ப ரீதியாகவும், செயற்கைத் தன்மையான பேச்சு மொழி, மற்றும் பிற அம்சங்களாலும் பலவீனமானதாக இருப்பினும் ஈழத்துத் திரைப்படம் என்ற வகையிலும், திரைப்படத்தில் எடுத்தாளப்பட்ட விடயம் வெளிப்படுத்துகை என்பதிலும் 'பொன்மணி' குறிப்பிடப்பட வேண்டியதாகிறது. எனினும் வேற்று மொழியைச் சேர்ந்த நெறியாளர் ஒருவர் இன்னொரு மொழித் திரைப்படத்தை நெறியாள்கை செய்வதின் பலவீனங்களும் பொன்மணிக்குள் அடக்கம்.

யாழ்ப்பாணத்தையும் கறுப்பு வெள்ளையில் இவ்வளவு அழகாகப் படம் பிடிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறார் பத்திராஜா.

பத்திராஜாவின் பார்வையில் எழுபதுகளில் யாழ்ப்பாணம் எப்படியிருந்தது என்பதை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் பொன்மணியில்.

மற்றையது, 'ஒயா தன்லொக்குலமயக்'. இது சிங்களக் கிராமம் ஒன்றின் வறிய குடும்பம் ஒன்றில் யுவதி ஒருத்தியைச் சூழப் பின்னப்பட்ட கதை. பெரியவளாகி விட்ட சுசீலாவதி என்கிற யுவதி. அவளைச் சுற்றி மொய்க்கிற அக்கிராமத்தின் ஊதாரி-சூதாடி இளைஞன், பள்ளியாசிரியர், அவளது வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கிற இன்னொரு இளைஞன். இவர்களுக்கிடையிலான ஊடாட்டத்தில் கதை நகர்கிறது. இறுதி நாளன்று திரையிடப்பட்ட படம் 'சொல்தாது உன்நேகே'.-பெயர்தெரியாதமனிதன்-காலிமுகத்திடலில் வெளிச்சக் கூட்டிற்குக் கீழ் அவனது வாசம். முன்னர்- இரண்டாம் உலக யுத்தத்தில்-இராணுவத்தில் இருந்திருக்க வேண்டும். அந்த வெளிச்சக் கூட்டிற்குக் கீழ் அவனுடன் இன்னும் மூன்று பேர். ஒரு விபச்சாரி, திருட்டையே பிழைப்பாகக் கொண்ட இளைஞன், பாரிலேயே தனது பெரும்பாலான நேரத்தைச் செலவளிக்கிற ஒரு நடுத்தர வர்க்கத்தினன். இந்த நால்வருக்குள்ளும் வெளிப்படையான உறவு என்று எதுவுமில்லை. ஆனால் புலப்படாத ஒரு தொடர்பு/உறவு.

அந்தப் பெயர் தெரியாத மனிதன் கிழிந்த இராணுவக் கோட்டுடனும், தொப்பியுடனும் காலையில் கடற்கரையில் உடற்பயிற்சி செய்வான். பாராளுமன்றத்திற்கும், பழைய பீரங்கிக்கும் முன்னால் தலை குனிந்து நிற்பான். யாரும் சட்டை செய்யாத பைத்தியக்காரன் அவன். யுத்தத்தின் கொடூரத்தால் மனப் பாதிப்புக்குள்ளானவன் என்பது அவனது கடந்த காலத்தை (flash back) இல் கொண்டு வரப்படுவதனூடாகக் காட்டப்படுகிறது.

இறுதியாக அவன் தன்னைக் காக்கும் என்று நம்புகின்ற அரசு, அதனது பொலிஸ் தன்னுடன் இருந்த விபச்சாரியையும், திருட்டுக் குற்றத்தின் பெயரில் இளைஞனையும் கைது செய்து கொண்டு போகிற போது திக்கித்துப் போய் நிற்பதுடன் படம் முடிவடைகிறது.


பத்திராஜாவின் படங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட/ நிலைநிறுத்தப்பட்ட கருத்துக்கள் மீதும், நம்பிக்கைகள் மீதும் கேள்விகளை எழுப்பி விடுகின்றன என்பர் விமர்சகர்கள்.

என்னுடைய அபிப்பிராயத்தில் நான் பார்த்த இந்த மூன்று படத்திலும் அவர் எழுப்பிய கேள்விகள் முக்கியமானவை. முடிந்தால் நீங்களும் ஒரு முறை பாருங்களேன்.





## தொர செய்யிறது.....

**சங்குப் பிள்ளை(55) மரக்கறித் தோட்டத்தில வேலை செய்கிறவர்** நாங்க வேலை நிறுத்தம் செய்யிறது சம்பள உயர்வு கோரி. நிர்வாகமோ தரமுடியாது என்று சொல்லுது. முடிவு காணும் வரை வேலை நிறுத்தம் செய்வோம். முடிந்தால் உண்ணாவிரதமும் இருப்போம். இந்த முறை நீதவானுக்குத்தான் வாக்களித்தோம். அவர் எந்தக் கட்சி என்று தெரியாது. ஒரு நாள் கூட வந்து பார்க்கவில்லை. ஆனா, நம்பிக்கை இருக்கு. அவர் வந்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார் எண்டு.



வேணுகோபால்

**வேணுகோபால் (ஆண்டு 10 மாணவன்):** தோட்ட்த்தில வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. சம்பளத்தை உயர்த்தக்கோரி. சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தா, எங்களுக்கும் படிப்பதற்கு கூட உதவியாக இருக்கும். எனக்கு ஐந்து அக்காமார். இந்தப் போராட்டம் சரியானது.



பழனியாண்டி

**பழனியாண்டி:** என்டை வீட்டில ஒரே ஒரு ஆள்தான் வேலை. ஐந்தாறு பிள்ளைங்க. ஒவ்வொருத்தனும் கலியாணம் கட்டிக் கொண்டு ஐந்தாறு பிள்ளைகளோட இருக்கிறாங்க. தோட்டத்தில வேலை இல்ல. வேலை கேட்டா, அடுத்த தோட்டத்தில போய் வேலை செய் என்கிறாங்க. அங்க வேலை செய்தா ஒரு நாளைக்கு 30ரூபா தான் சம்பளமுங்க. இதில மூன்று பிள்ளைங்க சாப்பிடலாமா? மருந்து வசதி இல்ல. பிள்ளைங்க என்ன சாவுறதா? தோட்டத்தில நாங்க வேலை செய்யிறம். கொழுந்து எடுத்துக் கொடுக்கிறம். எங்களுக்கு ஒரு கிலோ தேயிலையை நாற்பது ரூபாக்கு விக்கிறாங்க. அரசாங்கத் தோட்டத்தில ஒரு கிலோ தேயிலை ஒரு ரூபா. மற்றத் தோட்டங்களில 70 ரூபா சம்பளமுங்க. இங்க மட்டும் 60 ரூபா தாறாங்க. இதற்கெல்லாம், நாங்க போராட்டம்தான் பண்ணணும்., பசிக்கொடுமையால, பசிக்குச் சாப்பாடுதான் கேட்கிறம். படுக்கிறதுக்கு மெத்தை தா என்று கேட்க இல்லையே.



கோமதி

**"இ.தொ.கா. தலைவர்களில் நம்பிக்கை வைத்துத் தான் மக்கள் வாக்களித்தார்கள். அமைச்சரவையில் கூட தொழிலாளர்களின் பிரதிநிதி எனக் கூறிக் கொள்ளும் தொண்டமானும், செல்லச்சாமியும் இருக்கிறார்கள். இருந்தும் என்ன பயன்?"**

**கோமதி (ஆண்டு 10):** சம்பளத்தைக் கூட்டிக் கேட்கிறது சரி. அதற்காகப் போராடுறதும் சரி. அப்பா, அம்மா வேலை செய்ய வேண்டும். அவங்க வேலை செய்யாட்டி, நாங்க பள்ளிக்கூடம் போக முடியாது. இப்ப நாங்க சரியா கஸ்டப்படுகிறோம். நாங்க வாக்களிச்ச யாரும் இதுவரை வந்து பார்க்க இல்ல. வாக்குக் கேட்டு வாறாங்க. அதுக்குப் பிறகு வாறாங்க இல்ல. வேலைநிறுத்தம் செய்யிற காரணத்தை வந்து கேட்கிறாங்களும் இல்ல. அவங்க வந்து கேட்பாங்கனு எதிர்பார்க்கிறோம்.

**சிறுவன்:** அரசாங்கம் செய்யிறது பிழையுங்க. சம்பளத்தைக் கூட்டிக் கேக்கிறது பிழை இல்லைத் தானே. எங்களுக்கு படிக்கிறதுக்கு எந்த வசதியும் இல்ல. தொற செய்யிறது பிழை. போராடுவது சரி.

**படங்களும், கட்டுரையும் மோகனபாரதி-**

நன்றி - நூலகத்திட்டம்



# பிரஜாவுரிமை = மலையகத்தேசியம் பிழையான வாய்ப்பாடு

எம். ஸ்டாலின்

சரிநிகர் ஏப்பிரல் மாத இதழில் இ. தம்பையா எழுதியிருந்த மலையகத் தேசியம் பற்றிய கட்டுரைக்குச் சரிநிகர் யூன் மாத இதழில் பதிலெழுதியிருந்த மலையகன் எழுப்பியிருந்த கேள்விகளுக்கும் தம்பையாவின் கட்டுரையிலே பதில்கள் இருக்கின்றன.

ஸ்தூல நிலைமைகள் பற்றிய சரியான கணிப்பின்றி மார்க்சிய அடிப்படைத் தத்துவம் கூறுகின்ற வரையறைகளை மட்டும் அப்படியே தற்போதும் அர்த்தப்படுத்திப் பார்த்தாலோ அல்லது அந்த வரைவிலக்கணத்தை மட்டும் கொண்டு பார்த்தாலோ மலையக மக்களை அல்லது இந்திய வம்சாவளி மக்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் என்று கூடப் பார்க்க முடியாது.

மொழி, பொருளாதாரம், பிரதேசம், கலாசாரம் என்பவை யாவும் இல்லாமலே தேசிய இனங்களாக அல்லது சிறுபான்மை தேசிய இனங்களாக பல மக்கள் கூட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மிகவும் முன்னேற்றமடைந்த கருத்தின்படி ஒரு பரந்த மக்கள் கூட்டம் ஒரு சமூகமாக வாழ்கின்றது என்றும் அதற்கு எதிராக அடக்குமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இன்னொரு இனம் கருதுகின்ற போது ஒரு சமூகமாக வாழ்கின்ற மக்கள் கூட்டம் ஒரு இனமாக அங்கீகரிக்கப்படுவதற்கான அடிப்படை பிறந்து விடுகின்றது.

எனவே தேசியம் பற்றி வளர்ச்சியடைந்துள்ள பல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது மலையக மக்கள் அல்லது இந்திய வம்சாவளி மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனமாகக் கொள்ளப்படமுடியும்.

வடக்குக் கிழக்கிற்கு வெளியில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் ஒரேயடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்ற நல் நோக்கத்தில் பார்த்தால், எவ்வாறு மலையக மக்களை ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற முடிவுக்கு வர தேசியம் பற்றிய முன்னேறிய கருத்துக்களை துணையாக கொள்கிறோமோ அதே போன்று வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழர்களை எந்த தேசியத்திற்குள் அடக்குவது என்பது பற்றிய முடிவுக்கு வரவும் தேசியம் பற்றிய முன்னேறிய கருத்துக்களைத் துணையாகக் கொள்ளலாம்.

இந்திய வம்சாவளி அல்லது மலையக மக்கள் மலையகத்தில் செறிவாக வாழ்வதனால் மட்டும் மலையகத் தேசியத்திற்குள் மலையகத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களை மட்டும் உள்ளடக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாகாது. அப்படி முடிவு செய்வதால் அது தேசியம் பற்றிய ஆரம்ப கால வாய்ப்பாட்டை இறுக்கமாகப் பிரயோகிப்பதாகும் என்பதை மலையகன் அறியமாட்டாரா?

மலையகத் தேசியத்துள் இந்திய வம்சாவளி மக்கள் அனைவரையும் உள்ளடக்க வேண்டுமெனின் எல்லோருக்கும் பிரஜாவுரிமை பிரச்சினை இருக்க வேண்டும் என்று மலையகன் கூறுவது மலையக மக்கள் பற்றிய அவரது அறிவீனத்தையே காட்டுகின்றது. ஏனெனில் மலையகத்தில் வாழும் ஒவ்வொரு இந்திய வம்சாவளி மக்களுக்கும் பிராஜாவுரிமை பிரச்சினை இருப்பதாகக் கூறமுடியாது. வடக்கு மக்களுக்கும் கிழக்கு மக்களுக்கும் ஒரே பிரச்சினைகள் இல்லை. இன அடக்குமுறையின் விளைவாக வடக்கு மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் கிழக்கு மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. (வடக்கில் தரப்படுத்தலாகவும், கிழக்கில் நிலப் பிரச்சினையாகவும்

தொடங்கியது)

ஆனால் வடக்கு மக்களுக்கும் கிழக்கு மக்களுக்கும் இன அடக்குமுறை ஒரு பொது வடிவமாக இருப்பதும் அவர்கள் யாவரும் (தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அரசியல் ரீதியாக) ஒரு சமூகமாகவே - இலங்கைத் தமிழர்கள் என்றே அடையாளம் காணப்படுகின்றனர்.

அதற்கு மாறாக இன அடக்குமுறை பொதுவாக இருந்தாலும் வடக்கு மக்களின் பிரச்சினைகளும் கிழக்கின் பிரச்சினைகளும் ஒரேவாறாக இல்லை என்று கூறி கிழக்கு மக்களுக்கு தனித் தேசியம் இருப்பதாக கொள்ளல் முடியாது. அப்படி வடக்குத் தமிழர்களுக்கு வேறு தேசியமும் கிழக்குத் தமிழ் மக்களுக்கு வேறு தேசியமும் இருப்பதாகக் கொண்டால் இலங்கை வாழ் முழுத் தமிழர்களுக்கும் ஏறக்குறைய 10 தொடக்கம் 20 தேசியங்கள் தேவைப்படும்.

எனவே அடக்குமுறைகள் வருகின்ற உருவத்திற்கு ஏற்ப அதற்கான போராட்டங்களும் அமைய வேண்டும். அடக்குமுறைகளை எதிர்த்து வெற்றி கொள்வதற்கான தேசியம் பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும் அமைய வேண்டுமேயன்றி அடக்குமுறைகளுக்கு ஊக்கமளிப்பதாகத் தேசியம் பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும் அமையக் கூடாது.

பேரினவாத அடக்குமுறைகள், அவர்களால் அடையாளப்படுத்துகின்ற தன்மை என்பவற்றைப் பார்த்தால் நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் சமூகமாக வாழ்கின்ற இந்திய வம்சாளியினர் ஒரே விதமாகவே அடையாளம் காணப்படுகின்றனர். பொதுவான அடக்குமுறைகளுக்கே உட்படுகின்றனர்.

அதைவிட வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழ்கின்ற சகல தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் சீராக தீர்வு காண்பதற்காக முன்னேறிய அரசியற் கருத்துடன் நடைமுறையைப் பார்த்தால் அவர்கள் யாவரையும் ஒரு தேசியத்திற்குள் அடக்குவதே முற்போக்கானதாக இருக்க முடியும்.

எனவே மலையகத் தேசியம் அல்லது இந்திய வம்சாவளியினர் தேசியம் என்பதினுள் சகல இந்திய வம்சாவளியினரையும் உள்ளடக்க பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

1. மலையகத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு அங்கேயே வாழ்பவர்களையும்,

2. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்து கொண்டு மலையகத்தையே நிரந்தர வசிப்பிடமாகக் கொள்வோரும்

3. மலையகத்திலிருந்து வெளியேறி மலையகத்திற்குத் திரும்ப முடியாத, திரும்ப விருப்பமில்லாத ஆனால் இந்திய வம்சாவளி என்ற அடையாளத்துடன் ஒரு சமூகமாக வாழ்வோரும்

4. வடக்கு கிழக்கு தேசியத்துடன் பல காரணங்களுக்காகவும் இணைக்கப்பட முடியாத வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் மலையகத்துடன் சம்பந்தமில்லாத ஆனால் இந்திய வம்சாவளியினர் என்ற பொது அடையாளத்துடன் அல்லது அடக்கு முறைகளைப் பார்க்கும் போது தீர்விற்காக மலையகத் தேசியத்துடன் சேர வேண்டிய தமிழர்களும்

5. வடக்கு கிழக்கிலே இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்துடன் வாழும் (மலையகத்திலிருந்து குடிபெயர்ந்து) ஒரு சமூகமாக வாழ்வோரையும் மலையகத் தேசியத்துள் உள்ளடக்க வேண்டும்.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழர்கள் அவர்களுடைய பிரதேசம் தொடர்பாக (பேரினவாத அடக்குமுறைகள் காரணமாக) நிச்சயமற்றவர்களாக இருக்கின்றனர். அத்துடன் நவீன பேரின அடக்குமுறைகள் யாவும் முதலில் ஒரு இனத்திற்கான பிரதேசத்தை இல்லாமல் செய்வதையே பிரதானமாகக் கொண்டுள்ளன.

அவ்வகையில் பார்க்கும் போது மலையக மக்களுக்கென பாரம்பரிய பிரதேசம் இல்லாவிடினும் பிரதேசம் ஒன்றிருந்தது. இன்று அது நுவரெலியா மாவட்டத்திற்கு மட்டுமாகப் பேரின அடக்கு முறைகள் காரணமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

பிரதேசமே இல்லாது செய்யப்படும் நிலையில் ஒரு இனம் இல்லாமல் போய்விடுமா? அல்லது அந்நிலையில் அவ்வினம் அதனது இன உரிமைகளுக்காக சுயநிர்ணய உரிமைக்காக போராட வேண்டியதில்லையா?

எனவே வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு பிரதேசம் இல்லாது போனாலும் அவர்களை ஒரு இனமாகக் கொண்டு அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டாமா?

அதனால் தான் வடக்கு கிழக்கில் தமிழர்களின் தேசியத்திற்கு பிரயோகிக்கும் . கொள்கைகளை வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழ்வோரின் தேசியத்திற்கு பிரயோகிப்பதில் அவர்களுக்கு எவ்வித பயனுமில்லை.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தேசியம் - பாதுகாக்கும் தேசியம், வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்களின் தேசியம் உருவாக்கப்பட **வேண்டிய தேசியமாகும்**.

மற்றும் சகல **இந்திய வம்சாவளி** மக்களும் மலையகத் **தேசியத்தினுள் அடக்கப்பட வேண்டும் என்பதனால் எல்லோரும் மலையகத்தில்** சென்று குடியேறி வாழ **வேண்டியதில்லை**. ஏனெனில் வடக்கு கிழக்கு தமிழர்களைப் போன்று மலையக மக்களுக்கு மலையகத்தில் சொந்தக் காணி இல்லை? கிராமம் இல்லை? அவர்கள் நிரந்தர விலாசமே இல்லாதவர்களாகவே கொள்ளப்படுகின்றனர்.

வடமேல் மாகாணத்தில் இருக்கும் தமிழர்கள் யாவரும் வடக்கு கிழக்கு தமிழர்களைப் போன்று நீண்ட வரலாறு கொண்டவர்களல்லர். அவர்களுக்கு பிற்பட்ட காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்களும், பெருந்தோட்ட காலத்தில் தென்னந் தோட்டங்களில் வேலை செய்ய வந்தவர்களும் இருக்கின்றனர். இவர்கள் இலங்கைத் தமிழர்கள் போலன்றி இந்திய தமிழர்களின் கலாசாரம் பண்பாட்டை பெரிதும் தழுவுகின்றனர் என்பதினை கவனிக்கவும். (அவர்களுக்கு தனித்தேசியம் இருக்கிறதா என்று புதிதாக ஆராயத் தேவையில்லை)

பேரினவாத அடக்குமுறைகள் இருக்கின்ற போது ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசியத்துக்குள்ளும் உள்ளடக்காது அநாதையாக விட்டுவிடவும் இயலாது. அவர்களுக்கென பலநூறு தேசியங்களை உருவாக்கி உழலவும் முடியாது.

மாறாக அம்மக்கள் கூட்டம் ஆகக் கூடுதலாக பெரும்பாலும் ஒத்துப் போகக்கூடிய தேசியத்துடன் இணைக்கப்பட வேண்டும். அரசியல் ரீதியான கொள்கைகளும் அபிப்பிராயங்களும் பலாத்காரமாகாது. அத்துடன் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை விட சமூகப் பிரக்ஞையுடனும் மாறுபட்ட சூழ்நிலையிலும் கூடிய மட்டும் உயிர்ப்புடன் இருக்கக் கூடிய கொள்கைகளை முன்வைக்கப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கான தீர்வு தொடர்பாகவும் தம்பையாவிடம் குழப்பமான கருத்தே நிலவுகின்றது என்றும் அவர் மலையகப் பிரச்சினையின் ஆழத்தையும் ஒரு தேசியத்தின் சரியான தன்மைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறியுள்ளார் என்றே கூற வேண்டும் என்றும் மலையகன் எழுதியுள்ளார்.

மலையகன் மேற்படி முடிவுகளுக்கு எவ்வாறு வந்தார் என்பதற்கு ஆதாரம் காட்டாமல் வெறுமனே மேற்படி வசனங்களை எழுதியுள்ளார்.

வீரசாகசங்கள் பலபுரிந்த தமிழ்த் தீவிரவாத அமைப்புக்கள் திம்பு பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக முன்வைத்த கருத்துக்களை விட மிகவும் முற்போக்கான, இலங்கையில் வாழும் முழுத் தமிழ் மக்களின், முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை பிரயோகம் தொடர்பான முற்போக்கான கருத்துக்களை புதிய-ஜனநாயக கட்சி கொண்டுள்ளதை மலையகன் அறியாதது அவரது அறிவீனமே.

புதிய ஜனநாயகக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்று இயங்கிய காலத்தில் 1984 இல் நடைபெற்ற அதனது முதலாவது மாநாட்டில் மேற்படி தீர்மானங்களை முன்வைத்தது என்பது மலையகனுக்குத் தெரியாதா? தெரியாதது போல் நடிக்கிறாரா?

மலையக மக்களின் பிரச்சினை திம்பு பேச்சுவார்த்தையிலும் சரி இலங்கையின் வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட எல்லாவிதமான அசல், நகல் ஒப்பந்தங்களிலும் சரி வெறுமனே பிரஜாவுரிமைப் பிரச்சினை என்றே கொள்ளப்பட்டது.

தொண்டமானும் கூட அப்படித்தான் பார்க்கிறார். மலையகத்தின் ஏனைய தொழிற்சங்கங்களும் அப்படித்தான் பார்க்கின்றன.


மலையக மக்கள் முன்னணி மலையக மக்களுக்கென தனியான நிர்வாகப் பிரிவு தேவை என்றே கூறுகின்றது. அதனுடைய பரப்பு அதிகாரங்கள் பற்றிக் கூறவில்லை. வடக்கு கிழக்கிற்கு வெளியில் அல்லது இலங்கை வாழ் முழு இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி தெளிவான திட்டம் எதுவும் இல்லை. அவ்வாறே மலையகனும் நிலைப்பாடு கொண்டுள்ளார்.

ஆனால் மலையக மக்கள் ஒரு தேசியச் சிறுபான்மை இனம் என்றும் மலையகத்தில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை அதாவது மத்திய -ஊவா சப்பிரகமுவ மாகாணங்களில் செறிவாக வாழும் பகுதிகளை இணைத்து ஒரு பலமான சுயாட்சி உள்ளமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது. வடக்கு கிழக்கிலும் ஏனைய இடங்களில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் செறிவை கணக்கில் கொண்டு சுயாட்சி உப உள்ளமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் புதிய ஜனநாயகக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அக்கட்சி வடக்கு கிழக்கு மலையகம் இணைந்த 'ஈழம்' என்று கூறிக் கொண்டிருந்து விட்டு மாகாண சபையை ஏற்கவில்லை. மலைநாடு என்று கூறிக் கொண்டு 'நிர்வாக அலகு' தேவையென்றும் கூறவில்லை.

மலையக மக்களுக்கென ஒரு நிர்வாக அலகை கோரும் மலையகனின் கருத்தை விட சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்புகள் என்பன முற்போக்கானதும் அவ்வமைப்புக்கள் இன உரிமைகளை உறுதி செய்யும் அளவிற்கு அதிகாரங்கள் கூடியன ஆகும்.

எனவே மலையக மக்கள் அல்லது முழு இந்திய வம்சாவளி மக்களின் இன உரிமைகளுக்கான தீர்வு பற்றி தெளிவான முற்போக்கான கருத்து புதிய ஜனநாயக் கட்சியிடம் இருக்கின்றது என்பதுபுலனாகின்றதல்லவா. அது இன்னும் புதிய பரிணாமங்களை எடுக்க வேண்டும். அது வரலாற்றின் தேவையுடன் ஒட்டிய ஒன்றாகும்.



நன்றி - நூலகத்திட்டம்





# சாயிபாபா - மந்திரமுமில்லை மாயமுமில்லை

மாதவன்

ஏனென்று கேள்வி கேட்கத் தெரியாத சிறுபிராயத்தில் **சாய்பாபா** மிக நம்பிக்கைக்குரிய தெய்வம். அவர் குறித்துக் கட்டுக்கதைகள் ஏராளம். மறு பேச்சின்றி நம்பிய பராயம்.

பிரமைகள் உடைந்து விட்டன. இலங்கையின் பகுத்தறிவுவாதி **டொக்டர் ஏபிரகாம் கோவூருக்கு** நன்றி. ஆயினும், சில அறிஞர்களும், ஆய்வாளர்களும், அரசியல்வாதிகளும் இன்னமும் சாய்பாபாவின் காலடியில்.

டொக்டர் ஏபிரகாம் கோவூர் அவர்கள் சாய்பாபா செய்த அற்புதங்களைச் செய்து காட்டினார். சனம் கோவூர் பின்னால் திரண்டது கோவூர் சாய்பாபாவின் போலியை அம்பலப்படுத்தினார். ஆயினும் சாய்பாபா பற்றிய பிரமைகள் உடையவில்லை.

67 வயதாகிற சாய்பாபாவுக்கு எக்கச்சக்கமான சொத்துக்கள். 120 நாடுகளில் 1500 கோடி ரூபாக்கள் பெறுமதியான சொத்துக்கள் சாய்பாபாவிடம் உண்டு. எல்லாம் இப்போதுதான் வெளிச்சத்திற்கு வருகின்றன.

சாதாரண மக்களிடம் இப்போது கேள்வி எழுகின்றது. சாய்பாபா கடவுள் அவதாரம் தானா?

இந்தியாவில் சாய்பாபா பற்றிய பிரமைகள் உடையத் தொடங்கி விட்டன.

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இந்தியாவின் தூரதர்ஷன் தொலைக்காட்சிச் சேவை சாய்பாபா பற்றிய தகவல் படம் ஒன்று எடுத்தது. இதன் நெறியாளர் இதனைத் தொடுக்கின்ற போது(EDIT) ஒரு சுவாரசியமான சம்பவத்தைக் கவனித்தார். அது: சாய்பாபா ஒருவருக்கு ஒரு பொருளைக் கையில் திடீரெனத் தோன்றச் செய்து கொடுத்தார். இது படம் பிடிக்கப்பட்டிருந்தது. அதனை மெதுவான அசைவியக்கத்தில் (slow motion)பார்த்த போது சாய்பாபாவின் கைக்குள் சாய்பாபாவின் உதவியாளர் ஒருவரின் கை வேகமாக பொருளைத் திணித்ததனைக் கண்டார். அரசாங்கத்தால் வீடியோ கசெட் பறிமுதல் செய்யப்பட்டு, இந்நிகழ்ச்சி ஒளிபரப்புவது தடை செய்யப்பட்டது. ஆனால் இச்சம்பவம் வெளிவந்து விட்டது. இதனால் சாய்பாபாவின் அவதாரம் எனும் 'இமேஜ்' சோதனைக்குள்ளானது.

யூன் 6ம் திகதி அன்று நடந்த சம்பவம் சாய்பாபா பற்றிய பிரமை உடைவதற்கு முக்கிய காரணம் ஆனது.

இந்தியப் பத்திரிகைகளிலிருந்து தொகுத்த தகவலின்படி பின்வரும் சம்பவம் நடந்திருக்கிறது. **இந்தியா ருடே, ராணி, புதிய ஜனநாயகம்** ஆகிய பத்திரிகைகள் பின்வரும் தகவல்களைத் தந்திருக்கின்றன.

யூன் 6ம் திகதி இரவு 10 மணிக்கு சுரேஷ், சாயிராம், பிரபு, ஜெகன்னாத் ஆகிய நால்வரும் சாய்பாபாவின் பிரசாந்தி நிலையத்துள் நுழைந்தனர். இவர்கள் ஏற்கனவே சாய்பாபாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இந்நிலையத்திற்குள் நுழைந்த நால்வரும், எதிர்ப்பட்ட சாரதியையும், சமையற்காரனையும் கத்தியால் குத்திக் கொன்றார்கள். இன்னொரு உதவியாளர் கத்திக் குத்துக் காயத்துடன் ஓடி சாய்பாபாவின் அறையைத் தட்டினார்.

கலவரச் சத்தம் கேட்டு வெளியே வந்த சாய்பாபா, நிலைமையை உணர்ந்து எச்சரிக்கை மணியை அடித்து விட்டு இன்னொரு பக்கம் ஓடி ஒளிந்து கொண்டார்.

நால்வரும் சாய்பாபாவின் அறைக்குள் நுழைந்து கொண்டனர். உள்ளே வந்த பொலிஸ் குழுவினர் சாய்பாபாவின் சயன அறைக்குள் ஒளிந்து கொண்டிருந்த நால்வரையும், சுட்டுக் கொன்றனர்.

அடுத்த நாட்காலையில் சாய்பாபா, எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்பது போல பக்தர்களுக்குக் காட்சி அளித்தார். இச்சம்பவம் குறித்து பாபா இதுவரை 'அருளுரை' பகரவில்லை.

மேற்படி சம்பவத்தில் சந்தேகம் நிறைந்து இருப்பதாகவே இந்தியப் பத்திரிகைகள் கருதுகின்றன.

''அநாதரவான நான்கு பேரையும் பொலிஸார் வளைத்துப் பிடித்திருக்கலாமே? அவர்களைச் சுலபமாக உயிரோடு பிடித்து பொலிஸார் உண்மையை வெளிக்கொண்டு வந்திருக்க முடியும்'' என்கிறது **இந்தியா ருடே**. ''இந்தக் கொலைகளை நேரில் பார்த்த சாட்சி சாய்பாபா. அவர் பேச வேண்டும். அல்லது பொலிஸார் அவரைப் பேச வைக்க வேண்டும். அதுவரை உண்மை வெளிவராது'' என **ராணி**பத்திரிகை கூறுகிறது. ''சாய்பாபாவின் நடத்தை சந்தேகத்திற்குரியது. சாய்பாபாவும் அரசு-பொலிசும் மறைப்பதற்கு ஏதோ இருக்கிறது'' என **புதிய ஜனநாயகம்** சந்தேகப்படுகிறது.

**டெல் புறூக்** எனும் அமெரிக்க இளைஞன் சாய்பாபாவோடு முதலில் ஐக்கியம் கொண்டு, பின் சாய்பாபா ஒரு போலி என உணர்ந்த பின் விலகினான். அவன் சொல்கிறான்! ''பாபா ஒரு பொய்யன் என்பதைப் படிப்படியாக அறியலானேன். பணக்காரர்களை அதிகம் நாடுவதைக் கண்டேன். பாபா ஒரு தன்னினச் சேர்க்கையாளர். இரண்டு சந்தர்ப்பங்களில் சாய்பாபா இத்தகைய உறவில் என்னை ஈடுபடுத்த முயன்றார்'' என்கிற தகவலைத் தருகிறது **மக்கள் கொங்கிரஸின்** செய்தி மடல்.

இத்தகைய போலியான மனிதனை ஒரு அவதாரமாகக் கொண்டாடுவது வியப்பான விடயமல்ல. கல்வியறிவற்ற ஒரு நாட்டில் இது சாத்தியம் தான். அரசும் இதனை ஊக்குவிக்கும். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அரசியற் தலைவர்களோ, அரச அதிகாரிகளோ, பிரமுகர்களோ இப் போலியை நம்புகிறார்கள் என்பது ஒரு புறம் இருக்கட்டும். மக்கள் இப்போலிகளை நம்புவது அரசுக்குத் தேவையான ஒன்று. மக்கள் இவ்வாறு மந்தைக் கூட்டமாக்கப்பட்டால், அரசியல்வாதிகள் விடுகிற தவறுகளை ஏன் என்று கேட்க மாட்டார்கள். மந்தைக் கூட்டமாகத் தலையை அசைத்து விட்டுப் போய்விடுவார்கள். அதனால் சாய்பாபா போன்ற போலிகளை அரசு அம்பலப்படுத்தாது; அம்பலப்படுத்த முயல்பவர்களையும் அரசு கண்டிக்கும். சாய்பாபா விடயத்திலும் அதுதான் நடந்தது. சாய்பாபாவை எப்பாடுபட்டாவது காப்பாற்றிவிடுவது என்பது அரசுக்குத் தேவையான ஒன்று. எவ்வளவு மனித உயிர்களை விலை கொடுத்தாவது அரசாங்கம் இதனைச் சாதிக்கும்.

இவ்வாறு பயங்கரவாதியும் , பித்தலாட்டப் பேர்வழியுமான சாய்பாபாவுடன் இந்தியாவின் பிரதமரும், ஜனாதிபதியும் அமைச்சர்களும் நெருங்கிய உறவு கொண்டாடுவதற்கும் இதுவே காரணம்.

உலகம் முழுவதிலும் 5 கோடி பக்தர்களைப் பெற்றிருக்கும் சாய்பாபாவுக்கு இலங்கையிலும் பக்தர் கூட்டம் இருக்கிறது. அவர்களும் ''சாய்பாபா, சாயிராம்'' என முழக்கமிடுகிறார்கள். பொழுது போகாத ஓய்வு நேரம் அதிகம் உள்ள, தின்றது செமிப்பதற்காக பஜனை பாடுகிற கூட்டம் அது. இலங்கைத் தீவின் ஒரு புறத்தில் உயிர்கள் கொல்லப்படுவதனைப் பற்றி சற்றும் கரிசனம் காட்டாத பக்தர் கூட்டம்.

ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், சாயிபாபா இப்படித் ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' எனத் தப்பிப் பிழைத்திருக்கிற, சாய்பாபா பற்றிய பிரமைகள் உடைபடுகிற சந்தர்ப்பங்களிலும், சாயிபாபாவின் படத்திலிருந்து விபூதி கொட்டுமோ என்று எதிர்பார்த்தும், வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்திலும், பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்திலும் சாயி பஜனை செய்து கொண்டுமிருக்கிறார்கள் என்பதுதான்.


## நானும் ஒரு துரோகி

எனக்கு
செருப்பால் அடிக்கவேணும்
அதுவுமில்லாவிட்டால்
உங்கள்
தொண்டைக்குழிகளில்
சளிகட்டிப்போயிருந்தால்
காறித்துப்புங்கள்
எல்லோர் முகத்திலும்
எனக்கும்....
ஒரு
பொஸ்னியாவைப்போல்
இன்னுமொரு
சகோதரசமூகத்தை
அடித்துதுரத்தி
அகதிஅந்தஸ்து
வாங்கிக்கொடுத்ததற்காக...
நாயைப்போல்
காகங்களைப்போல்
ஒற்றுமையும்
நட்புமில்லாத
இந்தநன்றிகெட்டசமூகத்தில்
வந்து விழுந்ததிற்காக...
என்னைக் கூறுபோடுங்கள்
ஈரலையும் , குடலையும்
நாய்க்கும்
காகத்துக்கும் போடுங்கள்
நன்றியுடன்
தின்னும்
அதுவும் முடியாவிட்டால்
ஏதாவது ஒரு
இயக்கக்காரரிடம்
போய்ச் சொல்லுங்கள்
இவன் ஒரு துரோகியென்று
கட்டிவைத்து சுடட்டும்
இல்லையேல்
காட்டிக் கொடுத்து
காசு வாங்கட்டும்
நானும்
கொஞ்சம் கவிதைகளும்
என்னின்
பழைய நினைவுகளும்
இனியும்
இந்த ஊரில்
இருந்து நான்
என்ன மிச்சம்
போங்கள்
போய்ச் சொல்லுங்கள்

1993/06/24

பி.ரவிவர்மன்





## இறுதிவரை----

நெருப்பை ஊதி அணைத்து
தண்ணீர் தெளித்து விட்டதான வெறுமை.
வெறும் குடல்கள்
வெறும் வாழ்க்கை.
• புருஷனைத் தின்னி
உனக்கு அமங்கலம் பூசிய
கறுப்புத் துப்பாக்கியில் குண்டைப் பொருத்து.
குறிவை! உன்னை உரித்து
வெள்ளையாடையை உடுத்தியவர்கள்
அனைவரும் துடித்து துடித்து .
சாகும் வரை சுடு!
மன்னிப்புக் கேட்பவர்களையும்
சுடு!
அது உயிருக்கான பாசாங்கு!
அனைவரும் அழிந்த பின்
பிரேதங்களைக் கூட்டி நெருப்பு வை!
அக்கிரமம் அழிந்து போனதாய்
நினைத்து விடாதே!
உறுதியாய் நில்
உன் கால்களில்
உரம் ஏறும் வரை!

அக்குறணை
இளைய அப்துல்லாஹ்.




சந்தோஷம். ஒரு பக்கம்
கிடைத்திருக்கிறது.
கொஞ்சக் கவிதையும்,
சிறுகதையும்,
இடம் இருந்தால் குறு
நாவலும் பதிப்பதற்கு
ஒரு சந்தர்ப்பம்.
கிடைத்திருக்கிறது.
இளம் கவிஞர்களுக்கு
அனுமதி.
அனுப்புங்கள் கவிதை.
ஓரளவுக்குத் தரமிருந்தாலும்
பிரசுரிக்கிறோம். அயர
வேண்டாம்; அனுப்புங்கள்.
சிறுகதை, குறுநாவலையும்
எதிர்பார்க்கிறோம்.
இதுவரை பலர் கவிதை
அனுப்பியிருந்தார்கள்.
இடமில்லாது போனது
பிரசுரிக்காமைக்குக்
காரணம். இனிக் கொஞ்ச
இடமாவது உங்களுக்கு.
நீங்கள் செய்ய வேண்டியது
ஒன்றுதான். படைப்புகளை
அனுப்புங்கள்.

கபிலர்

## முண்டத் தேசம்! மயிர்களை உதிர்த்திய







இன்னும்நீ வாழ்ந்து கொண்டுதானிருக்கிறாயா
இந்தபூமியில்?
நான் என்னையே காணாமலாக்கி-
மரணித்துப் போனேன்...
★
மனிதர்களைக்கடித்துக் கடித்து
வெறும்சதைமுண்டங்களாகிப்போன
நாய்கள்மாதிரி-
மயிர்களை உதிர்த்துப் போய்நிற்கும்
இந்ததேசத்தில்
உனக்கு உயிர் இருக்கிறதே!
★
குட்டிக்குட்டிக்குனியவைத்தபோதுதான்
நிமிர்நேர்ந்தது...
★
நேற்று-
கூடப்பிறந்தவனின்முகத்திலேயே
காறித்துப்பியதைப்பார்த்து
ஒரு மானுடம் செத்துப் போனது...
★
மரங்கள்மாதிரி கொப்புகளைத் தாங்கவேண்டும்
இந்ததேசத்தில் வாழும் மனங்களும்...
அப்போதுதான்-
கோடரிகளின் வெட்டுக்கள்தாங்காது
துண்டங்களாகும்போது
அடுத்தகொப்பால் வாழ்க்கையை வாங்கலாம்...
★
இமைகள் தருணத்தில் மூடிக் கொள்ளும்
கண்களைக் காப்பாற்ற-
விரல்களே வில்லேற்றினால்...
......!
★
இன்னும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறாயா
இந்ததேசத்தில்...

-ரி.எல். ஜவ்பர்கான்

நன்றி - நூலகத்திட்டம்



## இனவாத....

ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வருவதற்காகவும் ஏனைய சில திருத்தங்களை அரசியல் யாப்பில் செய்வதற்காகவும் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது இலங்கையில் நடைமுறையில் இருக்கின்ற 'ஜனாதிபதி முறை பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் அமைப்பினதும் பிரெஞ்சு ஜனாதிபதி முறைமையினதும் ஒரு விசித்திரமான கலவை. இதன் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் தமிழ், முஸ்லீம் மற்றும் பிற இனத்துவ மக்களது வாக்குகளையும் வென்றெடுக்க வேண்டிய நிலை உள்ளது. புதிய ஜனாதிபதி பதவியேற்ற பிற்பாடு அரசியற் திட்டத்தைத் திருத்துவது பற்றியும் பழையபடி பாராளுமன்ற முறைக்குத் திரும்புவது பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

அரசியல் திட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது என்றால் இலங்கை அரசியலைப் பொறுத்த வரை மேலும் மேலும் பெரும்பான்மை மக்களின் பலத்தைப் பலப்படுத்துவது என்றே அர்த்தப்படும். இலங்கையின் அரசியல் யாப்பு வரலாறும் 1948இல் இருந்து இன்று வரை இதனைத்தான் சுட்டி நிற்கிறது.

திடீரென்று அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு ஆசைப்பட ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க அப்படி ஒன்றும் ஜனநாயகத்தில் பிரியம் கொண்டவரோ அன்றி அரசியல் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவரோ அல்லர்.

பிரிந்து போன ஐ.தே.கட்சியினரை மறுபடியும் சேர்த்துக் கொள்ளுவதற்கு பூர்வாங்க ஏற்பாடுகள் எல்லாம் நிறைவான- பிற்பாடு, எல்லோருடைய முகங்களையும் காப்பாற்ற இத்தகையதொரு முயற்சியில் அரசு ஈடுபடுகிறது என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனாதிபதியை இனிப் பாராளுமன்றமே தெரிவு செய்யும் என, யாப்புத் திருத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் பழைய படியும் பெரும்பான்மை அரசியலே ஆதிக்கம் பெறும் என்பதும் தெளிவு.

மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸின் செல்வாக்கு, எழுந்து வரும் முஸ்லீம் தேசிய வாதம் போன்ற காரணிகள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தையும் நீக்கி விடுவதற்கு வழிகோலலாம்.

அரசைப் பொறுத்த வரையில் எந்த வகையில் அரசியல் யாப்பு மூலமாக சிங்கள/பௌத்த மேலாட்சியை உத்தரவாதப்படுத்திப் பேணலாம் என்பதே குறியாக இருக்கும். (கண்டி-கொவிகம, பௌத்த என்று இன்னும் திருத்தமாக வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்!)

இலங்கையின் அரசியல் யாப்புத் திருத்தப்படத் தேவையில்லை. ''இப்போதுள்ள ஒற்றையாட்சி யாப்பை குப்பையில் வீசி எறிந்து விட்டு புதிய யாப்பொன்றைப் படைப்பதே அடிப்படைத் தேவை; திருத்தங்களுக்கு அன்றும் இன்றும் அர்த்தமே இருந்ததேயில்லை'' என்று கருத்துத் தெரிவித்தார் பழுத்த தமிழ் அரசியல்வாதியொருவர்.

இலங்கையின் அரசியல் யாப்பை சீர்திருத்துவதன் நோக்கம் உண்மையான ஜனநாயகம் பற்றித்தான் என்றால் அரசு செய்ய வேண்டியது

1. அடிப்படை உரிமைகள் பற்றிய ஐ.நா. பிரகடனத்தை யாப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

2. சிறுபான்மைத் தேசிய இனங்கள் மற்றும் மொழிவாரிச் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளை அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

3. ஐ.நா சர்வதேசப் பிரகடனத்துக்கு இசைந்த முறையில் அரசியல் யாப்பில் மனித உரிமைகள் பேணுவதைச் சேர்த்துக் கொள்வது.

இவ்வளவும் செய்யப்பட வேண்டுமானால் ஜனாதிபதி அவர்களே! நீங்கள் அரசியல் யாப்பை முற்றாக மாற்ற வேண்டியிருக்கும். மாற்றக் கூடிய தார்மீக பலமும், துணிவும், அரசியல் தீர்க்க தரிசன வீச்சும் உங்களுக்கோ உங்கள் அரசுக்கோ இருக்கிறதா?

## பொன்னாலை .....


இறப்போ, திருமணமோ எதுவுமே பதிவு செய்யப்படுவதில்லை.

அதற்கான பதிவுதாரர் இல்லை.

''பதிவற்ற பரம்பரை ஒன்று உருவாகிறது இங்கே என்றார்'' ஒரு முதியவர்.

ஜனாதிபதி பிரேமதாச பதவியிலிருக்கும் போது வந்தார். எல்லாம் தருவதாகச் சொன்னார். எதுவுமே தராமல் போய் விட்டார்.

டி.பி. விஜயதுங்க பிரதமராய் இருக்கும் போது வந்தார். இதே மாதிரி வாக்குறுதி தந்தார். எதுவுமே வரவில்லை. ஆனால் அவர் ஜனாதிபதியாக வந்து விட்டார்.



வைத்தியசாலை அறிவித்தல் இப்படி

இப்போதைய பிரதமர் ரணிலும் வந்து போயிருக்கிறார். எங்களுக்குத் தெரியும்; எங்களுக்கு எதுவும் வராது என்று. அதேபோல எங்களுக்குத் தெரியும்; அவர் ஜனாதிபதியாக வந்து விடுவார் என்று.

இந்த எல்லா ஏமாற்றுத்தனமான வாக்குறுதிக்கு மத்தியிலும், 'இல்லை'களுக்கு மத்தியிலும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பிரதான காரணம் இவர்களுடைய பெரும்பாலான உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள் என்பதே.

எனது கணவரும் மூன்று பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில். மூன்று வருடங்களாகிறது நான் அவர்களைச் சந்தித்து. இங்கிருந்து யாழ்ப்பாணம் போய்விட விருப்பம். உங்களால் பொன்னாலைப் பாதையைத் திறந்து விட முடியாதா?

எனக் கேட்டார் ஒரு பெண்.

யாழ்ப்பாணத்தில்ம் யுத்தம் நடந்தாலும், படையினர் குண்டுகளைப் பொழிந்தாலும் அங்கு ஏதோ ஒரு உயிர்ப்பு இருக்கிறது. இங்கு அமைதிதான். ஒரே அமைதி; அது மயான அமைதி.

அரசு எப்போது யுத்தத்தை நிறுத்தப் போகிறது?

எப்போது மக்களை வாழ விடப் போகிறது?

## ஜனாதிபதி...

இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் ஜே.ஆர் தீவிரமாக இருந்தார் என்றும் - காமினி, ஜே.ஆர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செய்யப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் முதல் ஜே.ஆரின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது- பேசப்படுகிறது.

எனினும் காமினியை மீண்டும் இணைப்பது தொடர்பில் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அக்கறை காட்டவில்லை என்பதும், மறைமுகமாக எதிர்த்து வருவதோடு முன்னைய ஜனாதிபதி பிரேமதாச பாணியில் ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழா, வீடமைப்புத் திட்டம், ஜனாதிபதி இடம் பெயர் சேவையில் கலந்து கொள்வது என தன்னை நிலை நிறுத்திக் கொள்வதிலும் ஈடுபட்டு வருவது அவதானிப்பிற்குரியது.

ஐ.தே.கவில் ரணில் தன்னை நிலை நிறுத்திக் கொள்கிற முயற்சிகளில் வெளிப்படையாக ஈடுபட்டு வருகிற அதே நேரத்தில் காமினியை இணைக்கும் நடவடிக்கையில் இருந்து ஐ.தே.கவை இயக்குகிற ஒவ்வொரு நடவடிக்கையிலும் ஜே.ஆரின் கையே ஓங்கியிருப்பதாகப் பேசப்படுகிறது. அப்போ இப்போதைய ஜனாதிபதி ஜே.ஆரா? விஜயதுங்கவா?

## ஸ்ரீநிவாசன்...

இந்தப் பாரம்பரியப் பிரதேசம் என்கிற கோட்பாட்டை நிலைநிறுத்தி வைத்திருக்கும் என்று எண்ணுவது தப்பானது. ஏனெனில் முறையான அதிகாரங்கள் அளிக்கப்படாத வெறும் வடகிழக்கு இணைப்பு அலகு ஒரு உயிரற்ற பொம்மை போலத்தான் இருக்கும்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்கள், கள்ளக் குடியேற்றங்கள், பிற மாகாணத்தின் பிரதேசங்களை இணைத்தல் போன்ற நடவடிக்கைகள் வடக்கையும், கிழக்கையும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலம் கொண்ட ஒரு அதிகார அலகாக இயங்குவதைத் தடை செய்ய எடுக்கும் திட்டமிட்ட முயற்சி என்பது தெளிவானதே.

அதிகாரமற்ற வெறும் இணைப்பை விட அதிகாரம் செறிந்த பிரிவு மேலானது.

ஆயினும் வடக்குக் கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்றும் வடகிழக்கு முஸ்லீம்கள் தமிழ் பேசும் மக்களின் ஒரு அங்கம் என்றும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டிருந்தால் வடமாகாண முஸ்லீம்களைப் புலிகள் விரட்டியடித்திருக்க வேண்டி வந்திருக்காது. ஏனைய தமிழ் இயக்கங்களும் இந்த விடயத்தில் சுத்தமான கரங்களை உடையவை என்று சொல்வதற்கில்லை. இந்தப் பாரம்பரியக் கோட்பாடு மீள்வரைவிலக்கணம் செய்யப்பட வேண்டும்.

**அடுத்த இதழில் ஒரு சிட்டுக்குருவி அப்பெடியு... அணிற்குஞ்சு...**

### தவறு

கடந்த இதழில் 'பிரேமதாசா எதிர்ப்பும் மேட்டுக் குடி அரசியலும்' என்ற கட்டுரையின் தொடர்ச்சி பத்தாம் பக்கத்தில் இடம் பெற்றிருக்க வேண்டியது ஒன்பதாம் பக்கத்தில் 'இருக்க...' என்கிற தலைப்பின் கீழ் தவறுதலாக இடம் பெற்றுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ-ர்

# பேச்சும் மூச்சும்

## உடுகம்பொலவும் பத்திரிகைகளும்

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல அரசினால் துறைமுக அதிகார சபையின் உயர்பீடத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்

இந்த நியமனம் தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு ''ஆச்சரியமான சம்பவங்கள் நடக்கின்றன. மேலும் பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன'' என பதிலளித்திருக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளரான ஹரோல்ட் ஹெரத்.

அரசாங்கத்தினால் 'அரசின் மீது அவதூறு பரப்பினார்' எனக் குற்றம் சாட்டப்பட்டு பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தேடப்பட்டவர், அதே அரசாங்கத்தில் உயர் பதவி ஒன்றில் நியமிக்கப்பட்டது ஆச்சரியமானது.

வெறும் கோமாளித்தனமானது; இந்த அரசியலைப் புரிந்து கொள்பவர்களுக்கு.

''நாட்டை விட்டு களவாகத் தப்பி ஓடியவர் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது ஏன் கைது செய்யப்படவில்லை?'' என்று பத்திரிகையாளர் கேட்டபோது ''விமானம் குறித்த நேரத்திற்கு முன்னர் வந்து விட்டது; பொலிஸார் போகப் பிந்திவிட்டார்கள்'' என்று 'வெங்காயத்தனமாக' பதிலளித்தார் அமைச்சர் ஹமீட்.

அந்தக் கோமாளித்தனமும் இங்குதான் நடந்திருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உடுகம்பொல அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை அடுக்கிய காலத்தில், அக் குற்றச்சாட்டுகளுக்கும் உடுகம்பொலவிற்குமான தொடர்பு, தொடர்பின்மையை ஆராயாமல் உடுகம்பொல மீது எந்தவிதமான கேள்வியையும் எழுப்பாமல் - எம்பிலிப்பிட்டியவில் ஜே.வி.பி காலத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் காணாமல் போனதற்கும் இது போன்ற இன்னும் பல சம்பவங்களுக்கும் உடுகம்பொல காரணமானவர் எனப் பேசப்பட்ட போதும்- அரசின் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியதை மட்டும் வைத்து உடுகம்பொலவை ஜனநாயகத்தின் காவலனாக காட்டிய சார்பற்ற பத்திரிகைச் சுதந்திரத்தின் தர்க்க ரீதியான விளைவுதான் ''இன்னும் ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன, பொறுத்திருங்கள்'' என்று சொல்கிற ஹரோல்ட் ஹெரத்தின் கோமாளித்தனமான பதிலும் அதனைக் கேட்டுக் குறிப்பெடுக்கிற பத்திரிகையாளர்களின் நிலைமையும்.

பத்திரிகையாளர் எப்போதும் மக்களின் குரலாக ஒலிப்பவர். பத்திரிகைகள் ஒரு தேசத்தின் ஆன்மா என்பதை இந்தக் கோமாளித்தனமான அரசியல்வாதிகள் புரிந்து கொள்கிறார்களோ இல்லையோ, பத்திரிகையாளர்கள் புரிந்து கொள்ளும் வரை பத்திரிகைகளின் 'சார்பற்ற சுதந்திரம்' என்பது கோமாளித்தனமாகவே கொள்ளப்படப் போகிறது.

## லக்திவ பற்றி ஒரு குறிப்பு

முன்னைய லக்திவ ஆசிரியர்களான சுனில் மாதவவும் வின்னி ஹெட்டிகொடவும் புதிய பத்திரிகை ஒன்றிற்கான நிதி சேகரிப்பில் இறங்கியிருக்கிறார்கள்.

பத்திராஜாவின் திரைப்பட விழாவினை அதற்காக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

அதற்கு முதல் வின்னி ஹெட்டிகொடவின் கேலிச் சித்திரக் கண்காட்சியை நடாத்தியிருந்தார்கள்.

லக்திவ ஆசிரியர் குழுவால் நிராகரிக்கப்பட்ட விளம்பரம் ஒன்று நிர்வாகத்தின் மேலாண்மையினால் ஆசிரியர் குழுவிற்குத் தெரியாமல் லக்திவவில் வெளியானதைக் கண்டித்து அதிலிருந்து வெளியேறினார்கள் இவர்கள்.

வெளியேறியவர்கள் 'சத்தியே ஹண்ட' (உண்மையின் குரல்) என்ற பத்திரிகையை ஆரம்பிப்பதாகப் பிரச்சாரம் செய்து நிதி திரட்டிக் கொண்டிருக்க அதே பெயரில் புதிய பத்திரிகை வெளிவந்திருக்கிறது. அந்தப் பெயரை அவசர அவசரமாகப் பதிவு செய்து பத்திரிகையை வெளியிட்டுள்ளது லக்திவவை வெளியிட்டு வந்த அதே நிறுவனம்.

அரசினதோ அல்லது நிதி மூலதன உடைமையாளர்களதோ மேலாதிக்கத்தின் கீழ் பத்திரிகைகளது சுதந்திரம் என்பது எவ்வாறு இருக்கும் என்பதற்கு லக்திவ ஒரு உதாரணம்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது இவர்களால் எப்போதும் கேலிக்கூத்தாக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சரிநிகர்

# ஸ்ரீநிவாசன்பிரேரணைகளை வரைந்தது அஷ்ரபே

கிழக்கில் கருத்துக் கணிப்பை நடாத்துவதென்பது சிங்கள ப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்த எடுக்கும் நடவடிக்கையே அன்றி வேறொன்றுமல்ல. இந்தக் கருத்துக் கணிப்பு தேசிய இனப் பிரச்சினையை எவ்வகையிலும் தீர்க்கப்போவதில்லை. மாறாக முஸ்லீம்களையும், தமிழர்களையும் நிரந்தரமாக மோதவிடுகிற ஒரு நடவடிக்கையாகத்தான் இது இருக்கப் போகிறது என சரிநிகருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருக்கிறார் முஸ்லீம் கட்சித் தலைவர் சேகு இஸ்ஸத்தீன்

அவர் மேலும் தனது உரையாடலில் ஸ்ரீநிவாசனால் முன்வைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு தனித்தனி மாகாணங்கள் என்கிற பிரேரணையை மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்காக வரைந்து கொடுத்தவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்தான் என்றும், அதனை முஸ்லீம் காங்கிரஸ் தேசியக் கொள்கை பரப்புச் செயலாளர் ஏ.எல்.அதாவுல்லாஹ் தன்னிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். அவருடனான பேட்டி கீழே:

**கிழக்கில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருவதாகத் தெரிகிறது. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கிழக்கில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துவதென்பது சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்த எடுக்கும் நடவடிக்கையேயன்றி வேறொன்றுமல்ல. இந்தக் கருத்துக் கணிப்பு தேசிய இனப் பிரச்சினையை எவ்வகையிலும் தீர்க்கப் போவதில்லை. மாறாக முஸ்லீம்களையும் தமிழர்களையும் நிரந்தரமாக மோதவிடுகிற ஒரு நடவடிக்கையாகத்தான் இது இருக்கப் போகிறது.

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடாத்த வேண்டுமென்று பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்மானித்திருந்ததாக அரச பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஆனால் அவ்வானதொரு தீர்மானத்தை தெரிவுக்குழு எடுக்கவில்லை என்று ம.ஐ.மு. தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். பின்னர் கருத்துக் கணிப்பொன்றை நடாத்த சூழ்நிலை உகந்ததாக இருக்கிறதா என்று பார்க்க காவல் துறை, அரசபடைத் தலைவர்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது. அவர்களது பதில் எதிரானதாக இருந்தது.

ஆனால் கருத்துக்கணிப்பைச் செய்து எவ்வாறாயினும் கிழக்கைப் பிரிக்க வேண்டுமென அரசாங்கம் பிடிவாதமாக இருந்தது. அதற்காக இப்போது கிழக்கில் பிரதேச சபைத் தேர்தல்களை வருட இறுதியில் நடாத்த முனைந்து வருகிறது. முதலில் அம்பாறை மாவட்டத்திலும் பின்னர் திருமலை, மட்டு மாவட்டங்களிலும் பிரதேச சபைத் தேர்தல்களை வைத்து நிர்வாகம் சீராக உள்ளது என்ற அபிப்பிராயத்தைக் காட்ட முனைகிறது. அதைத் தொடர்ந்து கிழக்கில் கருத்துக் கணிப்பைச் செய்யுத் தனக்குச் சாதகமாய் இருக்கும் என்று அரசு நம்புகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காமல் வடக்கில் தமிழர்களைத் தனிமைப்படுத்தி அதிகாரப் பரவலாக்கத்துக்கான தமிழ்,முஸ்லீம் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதே அரசின் நோக்கமாகும். அரசின் இந்தத் திட்டத்தை நாம் முறியடிக்க வேண்டும்.

**இந்தக் கருத்துக் கணிப்புத் தொடர்பாக முஸ்லீம்களது நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டுமென நீங்கள் எதிர்பார்கிறீர்கள்?**

வடக்குடன் கிழக்கை இணைப்பதா இல்லையா என்பது முஸ்லீம்களுடைய பிரச்சினை அல்ல. இது கிழக்கிலுள்ள தமிழர்களது பிரச்சினை. அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும் தாங்கள் வடக்குடன் இணைவது பற்றி. எனவே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்துவதாயிருந்தால் கூட கிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள் மத்தியில் மட்டுமே வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் அரசு கிழக்கு மாகாணம் முழுமைக்கும் முஸ்லீம்களையும், சிங்களவர்களையும் உட்படுத்தி வாக்கெடுப்பை நடாத்துமானால் முஸ்லீம்கள் வாக்களிக்காமல் விடுவதே சிறந்தது. அவ்வாறுதான் நாம் முஸ்லீம் மக்களைக் கோர உள்ளோம்.



எம்.எச். சேகு இஸ்ஸதீன்

எமது அபிப்பிராயப்படி இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு அவசியமற்றது. மாகாணசபைகளின் உருவாக்கத்தின் கீழ் வடக்கிற்கு ஒரு மாகாணசபையும், கிழக்கு தமிழர்களுக்கு ஒரு மாகாணசபையும், கிழக்கு முஸ்லீம்களுக்கு இன்னொரு மாகாணசபையையும்,அரசு உருவாக்க வேண்டும். கிழக்கின் சிங்களப்பிரதேசங்களை அரசு விரும்பினால் ஊவாவுடனும், வடமத்திய மாகாணத்துடனும் சேர்த்துவிடலாம். அல்லது அவை தனித்தும் இய ; கலாம்.

உருவாக்கப்படும் மாகாணசபைகளுக்கு முழு அதிகாரங்களையும் வழங்க வேண்டும். ஐந்து வருடங்களின்பின் கிழக்குத் தமிழ் மாகாணசபைக்கு ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்படலாம்; அது வடக்குடன் இணைய விரும்புகிறதா அல்லது தனித்தே இயங்க விரும்புகிறதா என. இணைந்து இயங்க விரும்பினால் இரண்டையும் இணைக்கலாம். அவ்வாறே முஸ்லீம் மாகாணசபையும் வடக்குடன் இணைய விரும்பினால் இணையலாம்.

**கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் முடிவு வட-கிழக்கு இணைப்பிற்குச் சாதகமாயிருந்தால், என்ன விளைவுகள் ஏற்படும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

முஸ்லீம்கள் மீதான அதிகாரத்தைப் புலிகள் செலுத்துவதற்கு வழிசமைத்ததாய் இருக்கும். ஏற்கனவே முஸ்லீம்களைக் கொன்றும், விரட்டியும், அடக்கியும் வரும் புலிகள் அவர்களது முஸ்லீம்களுக்கு எதிரான நடவடிக்கையைத் தொடர வாய்ப்பு வழங்கியதாக இருக்கும். கூடவே நாட்டைப் பிளவுபடுத்த நினைக்கும் புலிகளுக்கு முஸ்லீம்கள் வழிசமைத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்ற சிங்கள மக்களின் கோபத்திற்கும் ஆளாக வேண்டியிருக்கும்.

**பாதகமாயிருந்தால்?...**

முஸ்லீம்கள் தமிழர்களுக்கு எதிரான [illegible] என்ற பெயரில் புலிகளின் அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆகவே தான் நாம் முதலில் குறிப்பிட்டது போன்று கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு இப்போது அவசியம் இல்லை. அதுவும் முஸ்லீம்கள் இது தொடர்பாக வாக்களிக்க வேண்டியதில்லை. பதிலாக அரசு வடக்குத் தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள், கிழக்கு முஸ்லீம்கள் ஆகியோருக்குத் தனித்தனியாக மூன்று மாகாணசபைகளை உருவாக்க வேண்டுமென்றும் காலப் போக்கில் அவை விரும்பினால் இணைந்து கொள்ளலாம் என்றும் அவ்வாறான தீர்வொன்றை அமுலாக்குமாறும் வலியுறுத்துகிறோம்.

**பிரிப்பதனால் நிலைமை மோசமடையும் எனக் கருதிகிறீர்களா?**

யார், எவ்வாறு பிரிக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்த விஷயம் இது. கருத்துக் கணிப்பெடுப்பின் மூலம் பிரிக்கப்படப் போகின்றதானால் அந்தக் கருத்துக் கணிப்பெடுப்பில் 42%மான தமிழர்களில் கணிசமான ஒரு பகுதியினரும், கிழக்குப் பிரிவதை ஆதரித்தால் என்ன செய்வது? முஸ்லீம்கள் கருத்துக் கணிப்பில் வாக்களிக்காமல் 24%மான சிங்களவர்களுடன் 10%மான தமிழர்கள் வாக்களித்தாலும் கிழக்குப் பிரியலாம். அப்படிப் பிரியும் நிலை ஏற்பட்டால் என்ன செய்வது?

கிழக்குப் பிரிய வேண்டும் என விரும்பும் கிழக்குத் தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லீம்களுமாகச் சேர்ந்து கிழக்கைப் பிரித்துத் தரட்டும் என்று செயற்படத் தொடங்கினால் என்ன செய்வது? கிழக்கின் தமிழ் அரசியல்வாதிகள் கிழக்கைப் பிரிப்பதற்கு திடசங்கற்பம் கொண்டு செயற்பட்டால் என்ன செய்வது? ஸ்ரீநிவாசன்பிரேரணைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வடக்கும் கிழக்கும் தனியான சமஷ்டி அமைப்பு உத்தரவாதத்தில் பிரிக்கப்பட்டால் என்ன செய்வது? எனவே, இந்தப் பிரிவு விஷயத்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைச் சொல்ல எவ்வாறு? யாரால்? என்ற கேள்விகள் முக்கியமானவை.

**வட-கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்கிற கோட்பாட்டைச் சிதைக்க அரசு மேற்கொள்கிற ஒரு திட்டமிட்ட சதியே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு என்பது தொடர்பாகத் தங்களது அபிப்பிராயம் என்ன? இது சிறுபான்மை இனக் குழுமங்கள் அவர்களது சுயாதிபத்தியங்கள் தொடர்பானதொரு அரசியல் பிரச்சினை என நீங்கள் கருதவில்லையா?**

கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நிச்சயாக வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கத்தில் செய்யப்படும் ஒரு அரசியல் நடவடிக்கை என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்கிற கோட்பாட்டை சிதைக்கும் எண்ணத்துடனேயே இதனை அரசு மேற்கொள்கிறது என்பதையும் ஏற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட்டிருப்பது மட்டும்

→11



## செல்வி

முன்னால் இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணஐயர், முன்னால் பம்பாய் நீதிமன்ற தலைமை நீதிபதியும் இந்தியாவின் மக்கள் உரிமைகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான வி.எம் தார் முண்டே ஃப்ரண்ட் லைன் பத்திரிகையாசிரியர் என்.ராம், எழுத்தாளர் அஷிப் நந்தி உட்பட நூற்றுக்கும் அதிகமான இந்திய எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், கையெழுத்திட்டு செல்வியை (செல்வநிதி தியாகராஜா) விடுதலை செய்யும்படி தமிழீழ விடுதலைப் புலிகளை கோரும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அறிக்கையின் சாராம்சம்:

1991 ஒகஸ்ட் மாதம் யாழ்ப் பாணத்தில் வைத்துத் தமிழீழ விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட தமிழ்க் கவிஞரும் பெண்ணிலைவாதியுமான செல்வியின் நிலை குறித்து நாம் விசனமடைந்துள்ளோம்.

செல்வி என்று அழைக்கப்படும் செல்வநிதி தியாகராஜா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்று வந்த இறுதி யாண்டு மாணவராவர். யாழ்ப்பாணம் பெண்கள் ஆய்வு வட்டம், பூரணி பெண்கள் நிலையம் உ[illegible]ில் போன்ற அமைப்புக்களிலும் முக்கியமான பங்காற்றி இருக்கும் செல்வி பெண்ணுரிமைக்காக யாழ்பாணத்திலும் இலங்கையிலும் உழைத்தவர். அவருடைய கவிதைகள் யுத்தத்தினால் நலிவுற்றுள்ள பெண்கள் பற்றியதும் யுத்தம் பற்றியதுமான சித்திரங்கள் ஆகும்.

சர்வதேசப் பென் (international pen) அமைப்பின் 1992ம் வருட எழுத்தாளர் விருது செல்விக்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்விதமான நிபந்தனைகளும் அற்று செல்வியை விடுதலை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளை கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்களின் பட்டியலில் நியூ டெல்லியின் புகழ் பெற்ற சமூக ஆய்வு நிறுவனமான centre for the study of developing societies என்பதைச் சார்ந்த டி.எல்.சேத், ஹர்ஷ் சேத்தி, ஸ்மிது கோத்தாரி, சுரேஸ் சர்மா, சிவா விஸ்வநாதன் ஆகியோரும் அடங்குவர்.

பாண்டிச்சேரியிலிருந்து வெளியாகும் நிறப்பிரிகை எனும் ஆய்விதழில் ஆசிரியர் குழு மற்றும் இந்தியாவில் புகழ் பெற்ற ஆய்வாளர் க்ளோட் அல்வறஸ் ஆகியோரும் கையெழுத்திட்டவர்கள் பட்டியலில் உள்ளனர்.

— சிவா கௌதமன்

## எச். என்.பெர்னாண்டோ



எல்லாமே நிகழ்காலம் போலக் கண்ணுக்கு முன்னால் ஆடிக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்குகளில் திருநெல்வேலி வளாக ஒழுங்கையில் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகத்தில், ஆனைக்கோட்டையில் என்று எல்லா இடங்களிலும் நண்பன் 'எச்சென்'உடன் திரிந்த நினைவுகள் இப்போது மேலெழுகின்றன.

இன்று 'எச்சென்' இல்லை. தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்காக மிக நீண்டகால முதலே குரல் கொடுத்தவனும், அதன் விளைவாக இலங்கை அரசின் துன்புறுத்தலுக்கு ஆளாகியவனும் இடையில் கொஞ்சக் காலம் யாழ்ப்பாணத்தில் கருத்துரைத்தவனுமான நண்பன் எச்சென் சென்ற வாரம் இந்தியாவில் காலமாகி விட்டான் என்ற துயரச் செய்தி காற்றோடு வந்து சேர்ந்தது.

இடிச் சிரிப்பும் யானை போன்ற உடம்பும் என்று எச்சென்னை நண்பர்கள் கேலி செய்வது வழக்கம். கால்கள் யானையின் கால்களைப் போல பெருக்க நேர்ந்த ஒரு பயங்கரமான நோயே எச்சென்னின் மரணத்திற்குக் காரணம் என்று தெரிகிறது. சில காலத்திற்கு முன் புதிதாக ஒரு சிறிய வீட்டை கட்டுவதில் ஈடுபட்டிருந்த எச்சென் அந்த வீட்டில் ஒரு விருந்தினர் அறை உள்ளதென்று சொல்லி அழைத்துச் சென்று காட்டிய ஞாபகம் இன்னும் நினைவில் உள்ளது. கொழும்பில் இருக்க இடமற்றுத் திரிந்த போது 'வா வீட்டுக்கு!' என்று இழுத்துச் சென்ற எச்சென் எத்தனை தமிழருக்கென்றுதான் வீட்டில் புகலிடம் அளிக்க முடியும்?

அரசு எச்சென்னை வேலையில் இருந்து நீக்கிவிட்ட போதும் தொழிற் சங்கத்தூடாக நீண்டகாலமாகப் போராடி வென்றவர். சில வருடங்களுக்கு முன்புதான் தன்னுடைய வேலையை மறுபடியும் பெற்றிருந்தார்.

பேரினவாத அரசியல் சூழலிலும் எச்சென் போன்ற சில நட்சத்திரங்கள் ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களுக்குத் தார்மீக ஆதரவை தென்னிலங்கையில் வழங்கி வந்தனர் என்பது இலங்கையின் இனத்துவ அரசியல் வரலாற்றில் அழிக்கப்படாத அத்தியாயமாக இடம்பெறும்.

எச்சென்னுடையது உயர்ந்த அரசியல் மட்டுமல்ல; எச்சென்னும் உயரமான ஒரு மனிதன்தான்.

நண்பனே, உன்னுடைய நினைவையும் வாழ்வையும் நாங்கள் எப்போதும் நினைப்போம்.

ஆ-ர்

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்